# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999 புரட்டாதி திங்கள் 25-ம் நாள் (11—10—67) புதன் றஜப் 6 | புத்தகம் 22
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183 | இதழ் 10


# தமிழ் அதிகாரிகளை நியமனம் செய்ய மந்திரி ஏற்பாடு


## தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்த நடவடிக்கை

தமிழ் மொழி விசேட விதிகளை அமுல் நடத்துவதில் திறைசேரி அக்கறை செலுத்தத் தொடங்கியிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழ் மொழி விசேட விதிகளை அமுல் நடத்துவதற்காக அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் தமிழ் அதிகாரிகள் எத்தனை பேர் நியமிக்க வேண்டுமென்பதை அறிந்து தனக்குத தெரிவிக்கும்படி நிதி அமைச்சர் திறைச்சேரிக்கு உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த உத்தரவுக்கிணங்க திறைசேரி திணைக்களங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் அதிபர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதென்று அறியபபடுகிறது. தமிழ்மொழி விசேட விதிகளை அமுல் நடத்தும் பொருட்டு தத்தம் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தமிழ அதிகாரிகள் எத்தனை பேர் தேவைப்படுகின்றனர் என்பதை திறைசேரிக்குத் தெரிவிக்கும்படி அதிபர்கள் இச்சுற்று நிருபத்தில் கேட்கப்பட்டுள்ளனராம்.

தமிழ்மொழி விசேட விதிகளை அமுல் நடத்துமாறு தமிழரசாரும் தமிழ் பேசும் மக்களும் தொடர்ந்துகிளர்ச்சி செய்து வருவதின் விளைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.




"ஜொகக் கடி."



பலகலை பிறந்து
மேலாம்
பலகலை தவழ்ந்து
வல்லோர்
புலமையுள் வளர்ந்து
தெய்வப்
பேரருள் எனவே
பொங்க
கலைமகள் வாணி
என்றே
கற்றவர் போற்றிப்
பேணும்
நிலைதரு அறிவே
நெஞ்சம்
நிலைத்திடும் அருளே
போற்றி

—சக்தி

## தமிழரசு எதிர்ப்பு

திருமலைத்துறைமுகத்தை தேசியமயமாக்கும் திட்டத்தை தமிழரசுக்கட்சி வன்மையாக எதிர்க்க முடிவு செய்துள்ளது. திருமலைத் துறைமுகத்தை தேசியமயமாக்குவதை தாங்கள் எதிர்ப்பதாக தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகமும், கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதனும் பிரதம மந்திரிக்கு தந்திமூலம் அறிவித்துள்ளனர். இலங்கைத் துறைமுகத் தொழிலாளர்கழகமும் தேசிய மயத் திட்டத்தை ஆட்சேபித்து இருக்கிறது.

திருமலைத் துறைமுகத்தை தேசியமய மாக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும் விரைவில் சுவீகரிப்பு நடைபெறுமென்றும் இவ்வாரம் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

திருமலை துறைமுகம் தேசியமயமாக்கப்படுவதை ஆட்சேபித்து இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகம் பிரதமருக்கு தந்தியனுப்பியிருக்கிறது.

இதுதவிர, தமிழரசுக்கட்சியும் திருமலைத் தேசியமயத்

(9-ம் பக்கம் பார்க்க)

## வேண்டாம் இந்தப் பேச்சு!

வட பகுதியில் சில கல்லூரிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டிருப்பது கண்டு சிங்கள வகுப்புவாதிகள் சிலர் பொறுமைத் தியால வெந்து நருகின்றனர். ஒவ்வொரு பரீட்சையிலும் சித்திபெறும் தமிழ்ப் பேசும் மாணவர்களின் தொகை என்ன, சதவிகிதம் என்ன என்பதைக் கணக்குப் போட்டுப் பார்ப்பதில் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். அந்தகைய நபர்களில் நமது கல்வி அமைச்சரும் ஒருவர் என்று கூற வேண்டிய நிலை ஏற்பட்டதற்காக வருந்துகின்றோம்.

'வடபகுதிக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் விஞ்ஞான ஆய்வுக் கூடம் இருக்கிறது. இம்மாதிரி தென்னிலங்கைப் பாடசாலைகளிலும் ஆய்வுக் கூடங்களை திறுவும் வரை வட பகுதி பாடசாலைகளுக்கு இனி ஆய்வுக் கூடங்கள் கொடுக்கப்பட மாட்டா' என்று கல்வி அமைச்சர் முன்பும் ஒரு முறை ஒரு கூட்டத்தில் பேசுகையில் உள்ளத்தில் இருந்ததை அப்படியே வெளியே கொட்டிவிட்டார்.

இக்கூற்றுக்கு நாட்டிலே பலத்த கண்டனங்கள் எழுந்தன. 'அமைச்சர் வகுப்புவாத எண்ணம் கொண்டவர் — அவரிடம் பொறுமை குடிகொண்டுள்ளது' என்றெல்லாம் கண்டனக் கணைகள் அவர் மீது வீசப்பட்டன.

ஆனால் அமைச்சரோ அதற்கெல்லாம் அசைந்து கொடுக்கவுமில்லை—தனது போக்கை மாற்றிக்கொள்ளவுமில்லை, கடந்தவாரம் காலியில் ஒரு பாடசாலை விழாவில் மீண்டும்பழைய பல்லவியைப் பாடியுள்ளார்.

"வடபகுதி பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி போதனைக்கு எல்லா வசதிகளும் உண்டு. கடந்த ஆண்டு தமிழ் பிள்ளைகளில் 60% வீதம்பேர்விஞ்ஞானத்திலும 50% வீதம் பேர் பொறியியலிலும் சித்தி பெற்றுள்ளனர். சிங்களப் பிள்ளைகளை வீழ்த்திவிட்டு அவர்கள் முன்னேறுகின்றனர். எனது புதிய கல்வித் திட்டம் அக்குறையை நிவர்த்தி செய்யும்" என்று அவர் தம் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்துள்ளார்.

இக்கூற்றின் பின்னணியில் வகுப்புவாதக் கண்ணோட்டமும் பொறுமை உணர்ச்சியுமே இருக்கின்றன. இக்கூற்று தேசிய அரசின் நோக்கங்களுக்கு மாறானது—சிங்கள மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களிலே வகுப்புவாதத்தை வளர்க்கும் தீய எண்ணம் கொண்டது. வகுப்புவாதிகளைத் திருப்தி படுத்துவதற்காகவே அமைச்சர் இப்படிப் பேசுகிறார்போலும்!

ஓர் அமைச்சர் இவ்வாறு பேசுவது தேசிய அரசின் மீது தமிழ் பேசும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் சிதைப்பதாகும். தென்னிலங்கைப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் விஞ்ஞானக் கூடங்களை நிறுவுவதை நாமும் வரவேற்கின்றோம். ஆனால் அதுவரை விஞ்ஞான போதனை வசதிகள் வடபகுதி பாடசாலைகளுக்கு வழங்கப்பட மாட்டா என்றும் தமிழ் பிள்ளைகள் சிங்களப் பிள்ளைகளை வீழ்த்திவிட்டார்கள் என்றும் கூறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அமைச்சர் தேசிய ஐக்கியத்தை மனதில் கொண்டு பொறுப்புடன் பேசவேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மைக்குப் பெருமையளிக்கும் நவராத்திரி விழா

# வீரம், செல்வம், கல்வி மூன்றும் தர சக்தியைபணிவோம்

**க. வை. ஆத்மநாதசர்மா**

சிவநல் வினைகளுள் மிக்க சிறப்பு வாய்ந்தது நவராத்திரி நோன்பு. அது. 'நா நிலம் போற்றும் நவராத்திரி நோன்பு' என்ற தலைப்பின் கீழ் இங்கு ஆராயப்படுகிறது. நாநிலம்- நால்வகை நிலம். அது ஆகுபெயராய் உலக மக்களைக் குறிக்கும். நவ - ஒன்பது இராத்திரி-இரவுகள், நோன்பு-பிரதம்.

நவராத்திரி நோன்பு எனப் படுவது சக்தி வழிபாடு எனப் பலராலும் போற்றப்பட்டு வருகிறதே. எனவே அதனைச் சிவநல்வினை எனல் எவ்வாறு பொருந்தும்? என்ற வினு இங்கு எழலாம்.

### சிவம் என்றல் என்ன?

சிவம் என்ற சொல்லின் நுண்பொருளை அறியாதவரே இவ்வாறு வினவெழுப்பிய மயங்குவர். "சி" கரம் பதி எழுத்து "வ" கரம் பரையெழுத்து எனவே "சிவ" எனச் சொல்லும் போது சக்தியோடு கூடிய பரம்பொருளையே அது குறிக்கும். இனி, பரன் எங்கும் நிறைந்து விளங்குகிறார்; பரை எல்லாம் இயக்கத்துக்கும் மூலமாகிறார்.

எனவே நாம் ஏதொன்றை நினைப்பதாயினும், சொல்வதாயினும், செய்வதாயினும் சக்தியின்றி அவை நடைபெறுதலில்லை. நுணுகி நோக்குமிடத்துச் சக்தியின்றிச் சிவம் இல்லை என்பதும் புலப்படும். ஆகவே, நவராத்திரி நோன்பு என்பது உலகப் பொது நோக்கிலே, அன்னை பராசக்தியை அன்புகனிந்தருளுந் தாயாகவும்; உற்ற விடத்து உதவும் சகோதரியாகவும்; தெவிட்டா இன்பமருளும் கன்னிக் குழவியாகவும் கண்டு வணங்கி அனுட்டிக்கும் ஒரு சிறந்த விரதம் என்பதும்; சிறப்பாக நோக்குமிடத்து எல்லாம் வல்ல இறைவனிடத்தே எமது வாழ்வின் அடிப்படையான உண்மை நிலையை ஒப்பித்தலே என்பதும் பெறப்படும்.

### மூன்று பண்புகள்

அறிவு, அன்பு, அருள் என்பன மூன்று சிறந்த பண்புகள். அவை மூன்றும் ஒவ்வொரு மனிதருக்கும் இன்றியமையாதுவேண்டப்படுவன. அறிவு என்னும் பண்பு விரிவுபடுத்துவது, பரவச் செய்வது. பரம்பொருளாகிய சிவபிரானது இயக்கமே சிவசக்தி. அவர் பிராமமீ அல்லது சரஸ்வதி என்ற சக்தியை அதிட்டித்து நின்று பிரபஞ்சத்தை விரிவுபடுத்தும் முகமாக அறிவுச் செல்வத்தை வழங்குகிறார்.

இதனைக் குறிப்பிடவே நவராத்திரியின் இறுதி மூன்று நாளும் சரஸ்வதி பூசை வழிபாடு என வழங்கப்படுகிறது. கல்வியைப் பேணும் எவரும், நுண்கலைகளைப் பயிலும் எவரும் ஏன்? எந்தத் தொழிலாளராயினும் இந்த இறுதி மூன்று நாள் வழிபாட்டைச் செய்யாமலிரார்.

### பெண்களை சிறப்பிப்போம்

அறிவுச் செல்வியாகிய கலைமகள் குழந்தைத் தன்மை பூண்டவராய் எவரது உள்ளத்தையும் கவர்ந்து ஞானத்தைப் பரப்புவாராதலின் இந்த நவராத்திரி நோன்பில் பெண் குழந்தைகள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

நவராத்திரிகாலத்தில் சுமங்கலிகளான இளம்பெண்கள் யாவரும் மகாலட்சுமியாகப் போற்றி ஆடை ஆபரணம் அன்னம் பானியம், மஞ்சள் குங்குமம், பல தாம்பூலம் என்பவற்றுள் இயல்வன கொண்டு கொடுத்து வழிபாடு செய்யப் பட வேண்டியவராவர்

முதிர்ந்த சுமங்கலிப் பெண்களின்மனம் குளிரும்படி அவர்களைத் துர்க்காதேவியாகப் போற்றி உபசரித்துச் செய்யும் வழிபாட்டினுல் இராவுத்திரியின் அருட்செல்வத்தை இலகுவாகப் பெறலாம். இந்த அருட்செல்வமே நல்லொழுக்கம், நெஞ்சுத் துணிவு, போர் வெற்றி, கோழைபடாமை, பிறர்க்கு உதவி புரிதல், வீரம் தீரம், தைரியம், இரக்கமுடைமை என்னும் அருங்குணங்களைத் தரும்.

நவராத்திரி நோன்பின் இச் சிறப்பு வழிபாடு ஆலயங்கள் எவற்றிலும் செய்யப்பட வேண்டியது. ஏனெனில், சக்தியம்சம் இல்லாத ஆலயங்களே இல்லை. திருக்கோவில்களில்

கலைவாணி விழா
சிறப்புக் கட்டுரை

மாத்திரமா? வித்தியாலயங்கள், மடாலயங்கள், பாடசாலைகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள், நுண்கலைக் கூடங்கள், யந்திரசாலைகள், வாசிகசாலைகள், சனசமூக நிலையங்கள். அதிகம் விவரிப்பதேன், மக்கள் ஒருங்கு கூடும் இடங்களில் எல்லாம் நவராத்திரி நோன்பு அநுட்டிக்கப்பட வேண்டியதேயாம்.

குறிப்பிட்ட மூன்று சக்திகளாகிய துர்க்காலட்சுமி சரஸ்வதிகள் முறையே மலைமகள், அலைமகள், கலைமகள் எனப் போற்றி ஒன்றுபடுத்திய திருப்பெயரில் சண்டிகா பரமேசுவரி எனத் துதிக்கப்படுகிறார். அன்னை லலிதாம்பிகையானவர் சண்டிகாபரமேசுவரிஎனச் சிறப்பித்துப் போற்றி வணங்கப்பெறும்.

---

## கலைத்திருவே வாழி

செல்வங்கள் யாவினுஞ் சீர்
சிறந்து பெருங் கீர்த்திச்
செம்மை மேவி
வெல்வதில் திறம் கொண்ட
வல்லரசுக் கூட்டங்கள்
வந்திட்டாலும்
சொல்வதில் தமிழின்பம்
சொல்வார் முன் நடமிட்டு
வெற்றி காட்டும்
கல்வித் தாய், கலைத்தாய் எம்
கவிதைத தாய் பிறந்ததையும்
கருத்தில் வைப்பாம்

நல்லறிவைத் தெய்வமென
நம்பும் பெரும் பண்பை
நல்கி ஆங்கு
வல்லவரும் வழிவழியாய்
வணங்கி வழி காட்டி
வடிவமைக்கச்
சொல்லு தமிழ்ப் புலவோரும்
செந்தமிழில கவியாத்து
வணங்கிப் போற்றும்
கல்வித் தாய் கலைத்தாய் எம்
கவிதைத் தாய் பிறந்ததையும்
கருத்தில் வைப்பாம்

பல்கிப் பெருகிடும்
புதுமைகள் பலவற்றும்
படிந்துலவும்
செல்வமாம் நலலறிவைச்
சேர்த்துக் குவித்துச்
சிறப்பளிக்கும்
பல்கலைப் புலவோரும்
பகுத்தறிவாளரும் வேண்டும்
பணியில் தங்கும்
கல்வித் தாய், கலைத்தாய் எம்
கவிதைத் தாய் பிறந்ததையும்
கருத்தில் வைப்பாம்.

### வேறு

கல்வியில் தொழிலில் காணும்
கலைகளில் கருத்தில் ஆய்வோம்
சொல்லினில் பேச்சில் சூழும்
திருவெனும் அறிவே யாகும்
வல்லயி சக்தி என்றே
வணங்கு வார் வழக்கில் காணும்
நல்லதோர் உண்மைத் தெய்வ
நற்றிரு வருளே போற்றி.

மலரிலும் மணமாய் ஆகும்
மனத்திலே உணர்வாய் ஆகும்
பலரிலும் புலமை என்னும்
பகுத்தறி வாய்வு ஆகும்
கலைஞர்கள் கனிவேயாகும்
கவிஞர்கள் கருத்து மாகும்
தலைமிகு இசைவு மாகும்
தனித்துவ அருளே போற்றி

—சக்தி

---

# மொழி வழக்கும் எமது உரிமைப் போரே—வாலிப முன்னணி

"கோடீஸ்வரன் தொடர்ந்துள்ள மொழி வழக்கும் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் ஒரு அம்சமே. இந்த வழக்கை பிரிவி கவுன்சிலில் நடாத்துவதற்கு நிதி உதவி கோரி அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழ் பொது மக்களை எதிர் நோக்கி நிற்கின்றது. இந்த வழக்கு நிதிக்கு தமிழரசு வாலிப முன்னணிக் கிளைகளும் ஏனைய தமிழ் ஸ்தாபனங்களும் தம்மால் இயன்ற நிதி உதவி வழங்க முன்வர வேண்டும்" இவ்வாறு தமிழரசு வாலிப முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. ந. அருணசலம் விடுத்துள்ள வேண்டுகோளில் கோரியுள்ளார்.

அவ்வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

'தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் சார்பில் அரசாங்கத்தின் மொழிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட அநீதிகளை எதிர்த்து நடாத்தப் பட்ட கோடீஸ்வரன் வழக்கு உயர் நீதிமன்றத்தால் சட்டப் பிரச்சினைகள் மீது நிராகரிக்கப் பட்டதும், இவ்வழக்கை மொழி அடிப்படையின் காரணமாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பிரிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய முன்வந்திருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். மேற்படி சங்கம் இவ்வழக்கு நிதிக்கு உதவிகோரி தமிழ்ப்பேசும் பொது மக்களையும், பொது ஸ்தாபனங்களையும் வேண்டி நிற்கின்றது.

'எனவே தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களில் இவ்வழக்கும் ஒரு அம்சமாக இடம் பெறுகின்றது. ஆகவே எமது வாலிப முன்னணியின் கிளைகளும், உறுப்பினர்களும் ஏனைய தமிழ் பிரமுகர்களும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்கு இவ்வழக்கின் சார்பாக தங்களால் இயன்ற நிதியுதவி புரியுமாறு எமது வாலிப முன்னணியின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.'

---

## அச்சு இயந்திர உலகில் புரட்சி

நவீன சின்னஞ் சிறு 'ஆப்—செட்' அச்சு இயந்திரமொன்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது மணிக்கு 11,000 பிரதிகளை அச்சிடும் உலகச் சந்தையில் இது ஒரு புதுமையாகும்.

---

## எண்ணெய் கண்டுபிடிக்க புதிய பரிசோதனை முறை

பெர்லினில் பூமிக்கு அடியில் எண்ணெய் ஊற்றுகள் இருக்கலாம் என்று தெரிய வந்ததின் பேரில் அது எங்கு இருக்கிறது என்பதைக் கண்டறிய நூதன சாதனம் இப்போது உபயோகிக்கப் பட்டுவருகிறது. இந்த சாதனம் 'டிரக்' வண்டிகளில் கொண்டுசெல்லப்படுகிறது. பூதத்துவ நிபுணர்கள் பெர்லின் பூமிக்கு அடியில் எண்ணெய் அல்லது இயற்கை வாயு நிச்சயம் கிடைக்கும் என்று அபிப்பிராயப்படுகின்றனர்.

எண்ணெய் கிடைக்குமா என்பதைக் கண்டறிய இப்போது உபயோகிக்கப்படும் முறையின் பெயர் வைப்ரோ வின்மாலஜிஎன்பதாகும் இந்த சாதனம் மூலம் பூமி அதிரச் செய்யப்படுகிறது. இதனுல் ஏற்படும் அலைகள் பூமியின் மண் வரை சென்று பின்னர் பூமிக்கே எதிரொலிக்கப்படுகின்றன. இந்த அலைகளைப் பதிவு செய்யும் கருவியிலிருந்து எண்ணெய் கிடைக்குமா கிடைக்காதா என்பது தெரிந்துவிடுகிறதாம். இதைக் கொண்டு 5000 மீட்டர் ஆழம் வரை பரிசோதிக்க முடியுமாம்.

இக் கருவி மூலம் பூமியில் அதிர்ச்சி ஏற்படுத்துவதில் பூமியின் மேல் பரப்பு சேதமாவதில்லையாம். ஆனுல் இவைகள் போடும் சப்தம் மிக அதிகம். இவைகளை இரவில்தான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது., பகலி

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வளர்கிற திராவிடன்
வாங்கொடை

கே: எதற்கும் அஞ்சி, அஞ்சி வாழ்பவனிடம் இறுதியாக எஞ்சியிருப்பதென்ன?

ப: எதுவும் எஞ்சியிருக்காது. என்னெனவே அவன் அஞ்சி அஞ்சி செத்துப் போயிருப்பான்.

ஃ

எம். கே. பாறூக்
ரூ...ார்-2

கே: காதலில் அதிமுக்கியத்துவம் காட்டுபவர்கள் ஆண்களா, அல்லது பெண்களா

ப: இரண்டு உள்ளங்களும் பருவ காலத்தில் காதலுக்கு ஏங்கும் ஆனால் பெண்களே அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பர்.

ஃ

கே. நவரத்தினம்
நெடுங்கேணி

கே: பெண்கள் கேள்வி கேட்பார்களே தவிர பதிலளிக்க மாட்டார்கள் என்கிறீரே! கொழும்பிலிருந்து வெளியாகும் சில பத்திரிகைகளில் பெண்கள் வெகு ஜோராகப் பதில் அளிக்கிறார்களே?

ப: நீங்களும் ஏமாந்தீர்களா? அது பெண்களல்ல ஆண்கள்! பெண்களின் பெயருள் மறைந்து கொண்டு ஆண்கள் பதில் அளிக்கிறார்கள்.

ஃ

அ. சுபத்திரா
கம்பளை

கே: குயுக்தியாரே, நீர் அங்கொடை சைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி ஓடியது நினைவிருக்கிறதா?

ப: அங்கிருந்து நீர் எப்பொழுது தப்பி வந்தீர்?

ஃ

'சாந்தி'
கொழும்பு-12

கே: திரு. பொன்னம்பலம் தீண்டாமையை எவ்விதம் ஒழிக்க விரும்புகிறார்?

ப: மௌனம் சாதிப்பதின் மூலம்.

கே: இருமுறை ஐ. நா. சபை சென்று திரும்பிய பொன்னம்பலம் இம்முறை செல்லவில்லையே!

ப: முன்பு ஐ. நா. வில் குறிப்பிடத்தக்க எதனை எதையும் செய்யத் தவறி விட்டார்! இம்முறை அவர் அங்கு அனுப்பப்படாததற்கு இதுவும் ஒரு காரணம்.

ஃ

ஆரையூர்
மோகன்

கே: எனக்கு படிப்பு அவ்வளவு தலையில் போவதில்லை?

ப: தலைக்குள் மூளை இல்லாததால் தான் படிப்பு தலையில் போகாமல் வேறு எங்கேயோ போய் விடுகிறது.

ஃ

வா. இன்னத்தம்பி
கைதடி வடக்கு

கே: குயுக்தியாரே, தற்போது வாழ்க்கை செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணம் என்ன?

ப: அதிக உணவு உற்பத்தி காரணமாக இருக்கலாம். இலங்கை வரலாற்றிலே என்றுமில்லாத அளவுக்கு வாழ்க்கை செலவுப்புள்ளி சென்ற வாரம் அதிகரித்துள்ளது. அதாவது: 415.4

கே: ஸ்ரூவை வாடிவீட்டு சம்பவத்தின் பின்னர் மற்றைய வாடி வீட்டுக்காரர்கள் என்ன செய்கிறார்கள்.

ப: ஸ்ரூவை வாடி வீட்டில் அங்கள்ள புத்தகத்தில் பதியாமல் செய்தார்கள் மற்ற வாடி வீடுகளில் இப்போ தெல்லாம் பத்தகத்தில் பதிந்து விட்டுச் செய்கிறார்கள்.

ஃ

செல்வி............
சிலாபம்

கே: நான் ஐந்துமாதங்களாக ஒருவரைக் காதலித்தேன் அவரும் என்னைக் காதலித்தார். ஆனால் ஆறுவது மாதம் என்னிடம் பிரிவைக் கேட்கிறார் நான் என்ன பதில் அளிப்பேன்?

ப: இன்னும் மூன்று மாதங்கள் தானே எஞ்சியிருக்கின்றன. அதற்குள் கம்பி நீட்டி விடலாம் என்று எண்ணுகிறார் போலும். ஆனே விடாதீர்!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: உள்ளத்தை ஆமைக்கு ஒப்பிடுவது சரியா?

ப: ஆமை முயலை விட வேஷமானது என்றாலும் உள்ளத்தை அதற்கு ஒப்பிடமுடியாது. உள்ளந்தான் உலகிலே மிக வேகமானது.

கே: தி. மு. க. வில் உள்ளவர்களுக்கு அடிக்கடி விபத்து ஏற்படுவதன் காரணம் என்ன?

ப: ஆஸ்திகர்களின் சாபம் காரணமாயிருக்கலாம். அரசியல் அனுபவம் கூடும்போது படிப்படியாக விபத்துக்கள் குறைந்து விடும்.

ஃ

ஆரையூர் அழகன்
ஆரையம்பதி

கே: காதலில் தோல்வி கண்ட பெண்கள் தற்கொலை செய்ய எத்தனிக்கிறார்கள் ஏன்?

ப: உள்ளத்தைக் கொலை செய்த காதலைக் கொலை செய்வதற்காகவே அவர்கள் தங்களைக் கொலை செய்கிறார்கள்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

வ. ஆ. தங்கவேலாயுதம்
கொழும்பு-10

கே: கோடீஸ்வரன் வழக்கு நிதிக்கு அரசாங்க ஊழியர்கள் உதவ முன்வந்தது போல, தமிழ்த் தலைவர்களும் உதவ முன் வருவார்களா?

ப: உதவமுன்வரவேண்டும். தமிழரசுக் கட்சி ஏற்கனவே ரூபா 1000 வழங்கியுள்ளது.

ப: ஒவ்வொருவரும் கலப்பு மணம் செய்வதன் மூலம் தீண்டாமையை ஒழிக்கமுடியும் என்று ராஜாஜி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே சாதியை ஒழிக்க வேண்டுமென்று மேடைகளில் முழங்குவோர் கலப்பு மணஞ் செய்ய முன்வருவார்களா?

ப: கலப்பு மணம் மூலம் தீண்டாமையை ஒழித்தல் சாத்தியமன்று. தீண்டாமையை ஒழிக்க மனமாற்றம் தேவை. தீண்டாமையை அனுஷ்டிப்பவர்களும் பணத்தின் அடிப்படையிலே கலப்பு மணம் செய்ய முன்வருவர். கலப்பு மணத்திற்கு மனமாற்றம் தேவையில்லை. பணம் இருந்தால் போதும். கலப்பு மணம் செய்து கொண்ட பின்னர் தம்பதிகள் இருவரையும் ஆலயத்துள் செல்லாமல் தடுத்து விடுவர். எனவே தீண்டாமையை ஒழிக்க கலப்பு மணம் பயன்படாது. மனமாற்றந்தான் தேவை. அந்த மனமாற்றம் ஏற்பட நிலமானிய சமுதாய அம்சங்கள் அழிந்து ஒழிந்து முதலாளித்துவம் பூரணத்துவம் பெற்று மலர வேண்டும். மேநாடுகள் அதற்கு சான்று.

ஃ

ஆரையூர் அழகுமாமா
ஆரையம்பதி

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். ஆனால் அவளி[illegible] ளைத் திருமணம் செய்துகொள்ள[illegible]

ப: அவளிடம் இல்லாத அந்த இரண்டும் உங்களிடம் இருக்குமானால் திருமணம் செய்து கொள்ளுங்கள். அவ்விரண்டும் அவளிடமுமில்லை, உங்களிடமும் இல்லையென்றால் அந்த திருமணம் வேண்டாம்.

ஃ

ஜீ. ஜீ. ஆதரவாளர்
பருத்தித்துறை

கே: மாவட்டசபை மசோதா நிறைவேறியதும் பொன்னம்பலத்தின் அரசியல் எப்படியிருக்கும்.

ப: சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு அரசியல் குத்துக்கரணம் அடிக்க அவருக்குத் தெரியும். வெளியில் மா. வ. மசோதாவை எதிர்த்தாலும் உள் ளே சென்றதும் கைதூக்கி விடுவார்.

ஃ

கே. சி. நாயகம்
ஆரையம்பதி

கே: அக்கால நாகரிக நங்கைக்கும் இக்கால நாகரிக நங்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அவள் சேலை கட்டினால் இவள் 'தலையணை உறைக்கவுன்' போடுகிறாள்.

ஃ

'வாந்தகுமாரன்'
பதுளை

கே: கடன் வாங்கி கல்யாணம் செய்யலாமா?

ப: கடன் வாங்கலாம் கலியாணத்திற்குப் பிறகு -கல்யாணத்திற்கு கடன் வேண்டாம். பணமின்றி கலியாணம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்.

கே: ஆத்மாவைக் கௌரவிப்பது எப்படி?

ப: மனச்சாட்சிக்கு மாறாக நடந்து கொள்ளாமலிருப்பதே ஆத்மாவுக்குச் செய்யும் கௌரவம்.

ஃ

ஏ. எம். ஜயசீலன்
மட்டக்களப்பு

கே: ஐ. நா. பொதுச்சபைக்கு இம்முறை இலங்கையிலிருந்து சென்றுள்ள தூது கோஷ்டியை பற்றி உங்கள் கருத்து?

ப: அது ஒரு பட்டாளம்! 113பர் அணிவகுத்துச் சென்றுள்ளனர். ஒன்றும் பயனில்லை. ஜே. ஆர். அல்லது 'திரு' போன்ற திறமையும், வாக்கு வன்மையும் மிகுந்த ஓர் அமைச்சரின் தலைமையில் ஒரு சிறு கோஷ்டி சென்றிருந்தால் இலங்கையின் சர்வதேச அந்தஸ்து மேலும் உயர்ந்திருக்கும். இந்தியக் கோஷ்டிக்குப் பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் தலைமைதாங்கியிருப்பது அக்கோஷ்டிக்கு ஐ. நா. வட்டாரத்தில் எவ்வளவு செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறது தெரியுமா?

ஃ

எஸ். எம். வேலு
நுரளை

கே: இலங்கையிலிருந்து 525,000 மலைத் தோட்டத் தமிழர்களைத் திருப்பி அனுப்பும் இ. தொ. கா. முயற்சிக்கு அறிஞர் அண்ணாவும் ஆதரவளிப்பதாக திரு- தொண்டமான் ஒரு கூட்டத்தில் கூறியிருக்கிறாரே! உண்மைதானா?

ப: தமது திட்டத்துக்கு இந்தியப் பிரதமர் உட்பட எல்லோரையும் அவர் சாட்சிக்கு அழைத்து விட்டார். அண்ணா மட்டும் எஞ்சி நின்றார். இப்பொழுது அவரையும் சாட்சிக்கு இழுத்து விட்டுள்ளார்.



திருடர்கள் ஜாக்கிரதை

போலீஸ் படுதிக்கு புமலுப பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

— செய்தி

— 'உங்கள் பொன்னுனகைகள் பத்திரமா' என்று பாடிக்கொண்டு திருடர்களுக்கு உதவிக்கு வருவார்கள், அப்போது 'லபக்'கென்று பிடித்து விடலாமல்லவா?

மனித மிருகம்

இருமால் குட்டிகளை ஒரு பெண் பிரசவித்தாள்.

— செய்தி

— மிருகங்களிலிருந்தே மனிதன் தோன்றினான் என்பதை மனிதன் மறந்து விடாமலிருப்பதற்காக ஆண்டவன் இப்படி செய்திருப்பானோ!

புதிய மீனவர்கள்

வடபகுதியில் எதிர்க்கட்சியினர் சாதி யொழிப்பு மாநாடு நடத்துவர்.

— செய்தி

— சண்முகதாசன் கலக்கிய குட்டையில் மீன் கிடைக்குமா என்று பார்க்கப் போகிறார்கள் போலும் அவரது தோழர்கள்!

பிச்சை பெருமை!

இலவச அரிசி கிடைக்கும் இலங்கையில் பிறந்தது நமது அதிர்ஷ்டமே.

— ஜே. ஆர்.

— 'பிச்சை' வாங்குவதை அதிர்ஷ்டம் என்கிறார் நமது ராஜாங்க அமைச்சர்!

பின்வாங்கல்!

ஆல்முல்லையில் தமிழ் காங்கிரஸ் போட்டியிடாது.

— செய்தி

— வெற்றிகரமாக பின் வாங்கி விட்டார்களோ?

வேலையற்ற சங்கம்

வேலையற்றோர் சங்கம் நிறுவினர்.

— செய்தி

— வேலையற்றவர்களின் வேலைதான் சங்கங்கள் நிறுவுவது என்பதை சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறார்களோ?

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலவாணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை
வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்ட்டின் கமிஷன் அறிக்கை

# யார் தலையீடும் ஒன்றும் செய்யாது

### டாக்டர் நாகநாதன்

"ஒரு அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதும் எமது உரிமைகள் முழுவதையும் பெற்று விட முடியும் என்று நினைப்பது தவறானது. ஆனால் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்ததின் பயனாக தமிழினத்தின் உரிமைகளை பெறுவதற்கு வழி கோலுகின்றோம். அதை எவரும் மறுக்க முடியாது. தமிழினத்துக்கு பாதகமாக வரக்கூடிய சட்டங்களையும் சாத்துக்களையும் நீக்க முற்படுவதுடன் எமது இழந்த உரிமைகளை பெற முழு முயற்சி செய்து வருகின்றோம். இதனால் வரும் பலன்களை நாம் இப்போது கொக்கரிக்க வேண்டியதில்லை. காலம் இதை தமிழ் மக்களுக்கு உணர வைக்கும்" இவ்வாறு தமிழரசு வாலிப முன்னணி பொதுச் சபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசு வாலிபமுன்னணியின் பொதுச் சபைக்கூட்டம் 26-9-67 மு.ப. 10 மணிக்கு கட்சி பணிமனையில் வாலிப முன்னணித் தலைவர் திரு. செ. இராசதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, க. துரைரத்தினம், வி. தருமலிங்கம், டாக்டர். இ. மு. வி. நாகநாதன், செனட்டர். க. நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் இன்றைய அரசியல் நிலை, தமிழ் மக்களின் நிலை, வட பகுதியில் தமிழ் மொழி நிர்வாகச் சீர்கேடு, மாவட்ட சபை, யாழ் மாநகர சபை, மார்ட்டின் அறிக்கை, சாதிக் கலவரங்கள், ஆகிய விடயங்கள் முக்கியமாக வாதிடப்பட்டன.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக வாலிப முன்னணி உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் அவர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டது. மேற்படி விடயங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நீண்ட நேரம் பேசினார்கள். பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

### காலம் உணர வைக்கும்

"எமக்குச் சாதகமாக சட்டமாக்கப்பட்ட சில சாத்துக்கள் கூட இன்னமும் சரியான முறையில் அமுல் செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் சில அரசாங்க உயர் அதிகாரிகளின் வகுப்புவாத நடவடிக்கை தான்.

'நாம் அரசாங்கத்திலிருந்து எமது உரிமைகளைப் பெறத் தெண்டிக்கிறோமே தவிர தேவையற்ற அறிக்கைகளை விடுவதோ, அல்லது சிறு சிறு காரியங்களைச் செய்து விட்டு, அதைப்பிரசாரம் செய்வதோ எமது நோக்கமல்ல. எமக்குப் பாதகமாக வரக்கூடிய சட்டங்களையும், சாத்துக்களையும், நீக்க முற்படுவதுடன். தேசிய அரசாங்கத்தின் மூலம் எமது இழந்த உரிமைகளைப் பெற முயல்கின்றோம். இதனால் வரும் நலன்களை நாம் இப்போது கொக்கரிக்க வேண்டியதில்லை. காலம் எம் மக்களை உணர வைக்கும்.

'சட்டமாக்கப்பட்ட சாத்துக்களை அமுலாக்க தொடர்ந்தும் முயற்சி செய்து கொண்டே வருகின்றோம். இதற்கு எமது மக்களும், அரசாங்க ஊழியர்களும், தம்மாலான சேவையைச் செய்ய வேண்டுமென கேட்கின்றேன்.



### வழி கோலுகின்றோம்

'நாம் எமது சில கோரிக்கைகளுடன் அரசாங்கத்திற் சேர்ந்துள்ளோம். அவற்றை நாம் நிறைவேற்ற பாடுபடுகின்றோம். ஆனால் ஒரு அரசாங்கத்திற் சேர்ந்து கொண்டதால் எமது உரிமைகள் முழுவதையும் பெற்று விடலாம் என்று நாம் நினைப்பது தவறு. ஆனால் உரிமைகளைப் பெறுவதற்கு நாம் வழி கோலுகின்றோம். அதை மறுக்கமுடியாது.

இன்று ஏற்பட்டுள்ள தேக்க நிலையை, எமது எதிரிகள், பொறுப்பற்றவர்கள் பயன்படுத்தி மக்களைத் தவறான திசை திருப்ப முனைகின்றனர். இதில் தான் எமது இயக்க வாலிபர்கள் கண்ணும் கருத்துமாக கடமையாற்ற வேண்டும்".

### தலையீடு ஒன்றும் செய்யாது

டாக்டர் நாகநாதன் பேசுகையில், மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்தப்படுமெனவும், இதில் யார் தலையீடும் ஒன்றும் செய்யாதெனவும், இந்த நியாயமான அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதெனவும், குறிப்பிட்ட அவர் இதை அமுல் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காத பட்சத்தல் தாம் அரசாங்கத்தில் இருந்து வெளியேறவும் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

"நல்ல காரியங்கள் எவை தான் எவர் செய்தாலும், எந்த அரசாங்கம் செய்தாலும் நாம் அதை வரவேற்போம். ஆனால், எங்கள் உரிமைகளில் கைவைத்தால் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். இன்றைய தேசிய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எமது அடிப்படை உரிமைகளில் சிலவற்றை நாம் பெற்றுள்ளோம் என்று கூற முடியும். அவை இன்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் எமது உரிமைகளைப் பாதிக்கக் கூடிய சட்டங்கள் சகலதையும் நாம் தடுத்து நிறுத்தியுள்ளோம். அதுவே எமக்கு பெரும் நன்மை பயப்பதாகும்" என்றும் டாக்டர் தமது உரையில் குறிப்பிட்டார்.

### கதிரவேற்பிள்ளை கருத்துரை

தமிழ் பகுதிகளில் உள்ள பொருளாதார நன்மைகள் பற்றி நீண்ட நேரம் விளக்கம் கொடுத்த திரு. க. துரைரத்தினம், பா. உ. தமிழ் பகுதியில் சாதிக் கலவரங்களுக்கும் வேறுபாடு காட்டப்படுவதற்கும் முக்கிய காரணம் பொருளாதாரம் எனக் குறிப்பிட்டார்.

"சாதிக்கலவரங்களைத் தூண்டிவிட்டு அவற்றைச் சிலர் அரசியற் பிரச்சினைகளாக்க முற்படுகின்றனர். இவர்களால் ஒருபோதும் இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியாது. எமது கட்சியின் கொள்கைப்படி நாம் ஒவ்வொருவரும் நடக்க வேண்டும். சாதிப் பாகுபாட்டை ஒழிக்க நாம் அயராது பாடுபடவேண்டும். மனிதன் மனித உரிமையை மறுக்கக் கூடாது. மக்கள் ஒவ்வொருவருடைய மனமும் பக்குவப்பட நல்லதைச் செய்ய எமது வாலிபர்கள் கடுமையாக உழைக்கவேண்டும் என உருக்கமாக வேண்டிக் கொண்டார் திரு. துரைரத்தினம்.

### துரைரத்தினம் விளக்கம்

திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. கருத்துத் தெரிவிக்கையில் எமது உரிமைகளுக்காக எமது வாலிபர்கள் எவ்வளவு பாடுபடுகின்றார்களோ அதே போல் ஒவ்வொரு மனிதனுக்கும் மனித உரிமைகளைக் கொடுக்க வாலிபர்கள் தங்கள் உள்ளங்களை நன்கு திறந்து தியாகம் செய்யவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் தீவுப்பகுதியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையை ஒரு பொதுப் பிரச்சினையாக எமது கட்சி கவனிக்க வேண்டுமென தீவுப்பகுதி வாலிபர்களால் வற்புறுத்தப்பட்டது இக்குடிநீர்ப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தர முடிவை கட்சி எடுக்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மலையகத் தமிழரை சிங்களவராக்க சூழ்ச்சித் திட்டம்!

### கோவை மகேசன்

வேவ்வேறு பட்ட கலாசாரங்களைக் கொண்ட வெவ்வேறு மொழிகள் பேசும் வெவ்வேறு இனங்கள் வாழும் ஒரு நாட்டில், நாட்டின் முன்னேற்றத்துக்கும் நல்வாழ்வுக்கும் தேசிய ஒற்றுமை அத்தியாவசியமானது என்பது உண்மையே. ஆனால் அத்தேசிய ஒற்றுமையை எப்படி அடைவது என்பதில் உலகெங்குமுள்ள அரசியல் வாதிகளிடையே பலவித கருத்துக்கள் காணப்படுகின்றன.

### மூன்று வழிகள்

நாட்டில் வாழும் சகல இனமக்களுக்கும் சம சந்தர்ப்பமும் சம வாய்ப்பும் அளித்து வேற்றுமையில் ஒற்றுமை கண்டு தேசிய ஒற்றுமையை வளர்ப்பது ஒரு வழி.

சிறுபான்மையினங்களின் கலை கலாசாரம், மொழி பிரதேசம் போன்றவற்றை அழித்து, கொன்று குவித்து சிறுபான்மையினங்களின் அழிவில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவது இன்னொரு வழி. இதைத் தான் ஹிட்லர் செய்து பார்த்து ஈற்றில் தோல்வி கண்டான். யூத இனத்தைக் கொன்று அழித்துவிடுவதே தேசிய ஒற்றுமைக்கு வழி வகுக்குமென்று கருதினான். ஆனால் யூத இனம் இன்றும் வாழுகின்றது. ஹிட்லர் தான் இருந்த இடம் தெரியவில்லை.

மூன்றாவது வழியும் ஒன்று இருக்கிறது. சிறுபான்மையினத்தை பெரும்பான்மை இனத்துடன் கலந்து வாழச் செய்து, அதன் மூலம் சிறுபான்மை இனத்தின் தனித்துவத்தை அழித்து அவர்களையும் பெரும்பான்மை இனமாக்கி விடுதலே அந்த வழியாகும். அதாவது பாம்பின் வயிற்றுக்கு தேரை உணவாவது போல, சமுத்திரத்தில் ஆறு சங்கமிப்பது போல. பெரும்பான்மை இனத்துக்குள் சிறுபான்மை இனம் இரண்டறக் கலந்து பிரிக்க முடியாமற் செய்து விடுதல்.

இலங்கையிலுள்ள பெரும்பான்மை சிங்கள அரசியல்வாதிகள் இந்த மூன்றாவது வழி மூலம் இந்நாட்டின் சிறுபான்மைப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி போட்டு விடலாம் என்று தவறாக கணக்குப் போட்டிருக்கிறார்கள். இலங்கையில் ஒரே மொழி, ஒரே இனம், ஒரே மதம் என்று சிங்களத் தலைவர்கள் பேசும் போது இந்த நச்செண்ணத்துடன் தான் பேசிவருகிறார்கள்.

இந்த நாட்டிலுள்ள சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி—மூன்றின் நோக்கமும் இதுதான். அதனால் தான் அவை தமிழினத்தின் தனித்துவத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவருகின்றன. தமிழர் பிரதேசத்தை தமிழர் பிரதேசம் என்று ஏற்கமறுக்கின்றன. தமிழர் பிரதேசத்தை தமிழரே ஆட்சி செய்யக் கூடிய ஒரு அரசியல் முறையை எதிர்த்து வருகின்றன.

### மலையகத் தமிழரை விழுங்க திட்டம்

இக்கட்சிகளைத் தவிர இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளைச் சேராத சில சிங்களப் பிரமுகர்களும் இதே நோக்கத்துடன்தான் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களை 'சிங்களமயமாக்கு' முன்பு — மலைநாட்டுத்தோட்ட தொழிலாளர்களை 'விழுங்குவதற்கு' தான் இப்போது முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

### 'இலங்கையர்' ஆகும் தகுதி என்ன?

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை பெறும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தனி இடாப்பில் வைக்கப்பட வேண்டுமெனவும், 'இலங்கையராக' வாழக் கூடிய 'தகுதி' பெற்ற பின்னரே பொது வாக்காளர் பட்டியலில் இடம் பெற வேண்டுமெனவும் கூறப்பட்டது இந்த நோக்கத்துடன் தான். இலங்கையராக வாழக் கூடிய 'தகுதி' என்ன தெரியுமா? சிங்களத்தை படித்து பௌத்தத்தை தழுவி சிங்களவராக மாறுவதற்கு மலையகமக்கள் தம்மைத் தயார் செய்ய வேண்டும் என்பது தான். மல்வத்தை பீடாதிபதி இதை பகிரங்கமாக கூறியிருந்தார். அதை இந் நாட்டு

# இரியகொல்லையின் கூற்றுக்கு இளைஞர்கள் தரப்போகும் பதிலென்ன?

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரஜைகளாவதற்கு மலையகத் தோட்டத் தொழிலாளரிடம் ஆர்வமில்லை

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்வதற்கு தாம் எதிர்பார்த்தளவு தோட்டத் தமிழர்கள் முன்வரவில்லையென்று இந்திய தூதுவரகத்தைச் சேர்ந்த ஒரு உயர்தர அதிகாரி நமது நிருபரிடம் தெரிவித்தார். தோட்டத் தமிழர்களிடம் இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதில் அதிக ஆர்வம் காணப்படவில்லையென்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தியப் பிரஜாவுரிமை பெறுவதில் தோட்டத் தொழிலாளர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் ஒவ்வொரு மாதமும் நூற்றுக் கணக்கானோர் இந்தியப் பிரஜையாகி வருவதாகவும் தினசரிப் பத்திரிகைகள் பிரசாரம் செய்து வருவதை நமது நிருபர் சுட்டிக்காட்டிய போதே மேற்படி அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரஜாவுரிமை கோரி தோட்டத் தமிழர்களை விட ஏனைய இடங்களில் வாழும் இந்திய வம்சாவழியினர்களிடமிருந்தே மனுக்கள் வருவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இது பற்றி ஒரு தொழிற்சங்கப் பிரமுகரிடம் நமது நிருபர் குறிப்பிட்டபோது, 'எவ்வளவு தான் தூண்டுதல் அளித்த போதிலும், இந்தியப் பிரஜையாவதற்கு தோட்டத் தமிழர்கள் பெரும்பாலும் முன்வர மாட்டார்கள். பல தலைமுறைகளாக இந் நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள் அவர்கள். இந்தியக் கரையே எப்படிப்பட்டதென்பது அறியாதவர்கள் அவர்கள் இந்தியாவுக்கு சென்று எப்படி வாழ முடியும். தோட்டத் தமிழர்களுக்கு இலங்கையே தாய் நாடு. இந்தியா அன்னிய நாடுதான்' என்று குறிப்பிட்டார்.

## மாற்றார் மருள மலையகத்தில் வளர்ந்துவருகிறது இ. தொ. க.

இலங்கைத் தொழிலாளர் கழகம் இன்று மலையகமெங்கும் கிளை விட்டு படர்ந்துவிட்ட ஓர் ஆலவிருட்சத்தைப் போல பரவிட்டது. ஆனால் இன்னும் மலையகத்திலுள்ள ஒரு சிலர் நாம் ஏன் இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் அங்கம் வகிக்கவேண்டும். அதனால் எமக்கு உண்டாகும் நன்மையென்ன? எமது பிற்காலச் சந்ததியினருக்கு என்ன நன்மையுண்டு? நமது இனத்திற்கு என்ன நன்மையுண்டு என்றெல்லாம் தெரியாது இருந்துவருகின்றனர்.

இதனை அறிந்துகொள்ளமுற்படாததற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று இன்று கழகம் வளர்ந்துவிட்டதைக் கண்டு சில தொழிற்சங்கவாதிகள் அதன் வளர்ச்சியிலே பொறாமைகொண்டு கழகத்தைப் பற்றி தவறான பல கருத்துக்களை மக்களுக்கு போதிக்கின்றனர். மற்றது எந்த அடிப்படையில் கழகம் வழிநடத்தப்படுகின்றது என்பதை இன்னும் தெரிந்துகொள்ளாமல் இருப்பது.

### தொழிலாளர்கள் வளர்ச்சியை தடுத்தனர்

தமிழரசுக்கட்சி ஏன் மலையகத்தில் தொழிற்சங்கத்தை ஆரம்பித்தது? தமிழரசுக்கட்சி மலையகத்தில் தொழிற்சங்கம் அமைக்கும் முன்னம் எத்தனையோ தொழிற் சங்கங்கள் மலையகத்தில் உலவி வந்தது மறுக்கமுடியாத உண்மையாகும். தமிழர்களின் தலைமையிலேயும் மற்றும் பல திராவிடர்களின் மத்தியிலேயும் தொழிற் சங்கங்கள் மலையகத்தில் இயங்கி வந்தன. ஆனால் அவைகள் யாவும் தொழிலாளர்களை வளர்ப்பதற்கு பதிலாக தொழிலாளர்களை தங்களது பேச்சினால் மாத்திரம் வசப்படுத்தி அவர்கள் வளரவிடாமல் தடுத்துவந்திருக்கின்றன என்று எண்ணவேண்டிய சூழ்நிலை நிருபிக்கப்பட்டுவந்தது.

அதுமாத்திரமல்ல, இன்று தமிழரசுக்கட்சி வகுப்புவாதக்கட்சியென்று வாணித்துக்கொண்டிருக்கும் ஒருசிலர், இலங்கைத் தொழிலாளர் கழகம் வகுப்புவாதச்சங்கம் என்று கூறிக்கொண்டிருக்கும் தொழிற் சங்க தலைவர்கள் அன்று தமிழ் தொழிலாளர்களை வகுப்புவாதிகளாகவே வளர்த்து வந்தனர்.

### யார் வகுப்புவாதிகள்!

அவர்களை இந்நாட்டிலுள்ள வசிக்கும் தமிழர்களோடு தமிழர்களாக ஒன்றுசேர விடாமல் பார்த்துக்கொண்டனர். இது வகுப்புவாதத்திற்கு மாத்திரமன்றி தங்களது தலைமையை பாதுகாத்துக்கொள்ளவும் இவ்வழியைக் கடைபிடித்தனர் என்று கூறினால் மிகையாகாது.

தங்களது தலைமையை பாதுகாத்துக் கொள்ள இவர்கள் இவ்வழியை கடைபிடித்து வந்தனர் என்பதற்கு, தமிழர்கள் போராட்டத்தில் மலையகத் தமிழ் தொழிலாளர்களை பங்குபற்ற விடாமல் தடுத்து வந்ததும் ஒரு காரணமாக முடியும்.

தொழிலாளர்கள் பல போராட்டங்களுக்கு பொங்கி எழுந்த சமயங்களிலும் தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த அவர்கள் போராட்டம் செய்யாதவாறுபார்த்துக் கொண்டனர்.

### "மலை மொழியாள்"

### இன்றைய இழி நிலைக்கு காரணம் யார்?

அன்று தொழிலாளர்கள்தங்களது விமோசனத்திற்காக போராட்டங்கள் செய்திருந்தால் இன்று இழிநிலையில் வாழவேண்டிய அவசியம் இருந்திருக்காது; மந்தைகள் போல எட்டடி காம்பிராவில் இருக்கவேண்டிய துர்பாக்கிய நிலை இருந்திருக்காது, ஆடுமாடுகளைபோல கள்ளத்தோணி என்று தெருவெல்லாம் விரட்டியடித்த நிலை வந்திருக்க முடியாது. தோட்டத் தொழிலாளர்கள் மரியாதையற்றவர்களாக வாழக் கூடிய நிலை வந்திருக்க முடியாது.

இப்படி எண்ணற்றபிரச்சினைகளுக்கு மத்தியில வாழ்ந்து வரும் தமிழ்தோட்டத்தொழிலாளர்களின் இன்னல் போக்குவதற்கு, அவர்களை தமிழர்களாக தலை நிமிர்ந்து வாழவைப்பதற்கு சாலச் சிறந்த வழியை ஆராய்ந்த தமிழரசுக் கட்சி மலையகத்தில் ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது.

### எதிர்ப்பில் தோன்றியது

அந்த முடிவை தமிழ் அரசுக் கட்சி வெளியிட்ட போது எதிர்க்காதவர்கள் இல்லை. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்ததுபோல் இருக்கிறது தமிழரசுக் கட்சி தொழிற் சங்கத்தை மலையகத்தில் அமைப்பது என்று ஒரு பக்கம், எங்களது பிணத்தின் மேல் தான் நடந்துவரவேண்டும் மலையகத்திற்கு என்றுஇன்னொருபக்கம். வகுப்புவாதிகளை மலையகத்துள் நுழைய விடாதீர்கள் என்று எதிர்ப்பு மற்றொருபக்கம், இப்படி திரும்பிய பக்கமெல்லாம் எதிர்ப்பு கண்டனங்களை தொடுக்காத தொழிற்சங்கத் தலைவர்கள் இல்லையென்று கூறலாம். அரசியல் தலைவர்கள் சிலரும் விட்டு[illegible] வில்லை. அவர்களின் கண்டனக் கணையை. அப்படி எண்ணற்ற கண்டனக்கணைகளுக்கு மத்தியிலே அட்டன் நகரில் 20 30 மக்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகம் 4 ஆண்டுகளுக்குள் 40 ஆயிரம் அங்கத்தவர்களைத் தாண்டி மலையகத்தின் மாபெரும் தொழிலாளர் சக்தியாக விளங்குகிறது.

### கழக வளர்ச்சியின் இரகசியம்

கழகம் வெற்றி நடைபோட்டு ஓங்கி வளர்ந்து வருவதற்கு காணம் கழகத்தின் சேவை, அது கொண்டிருக்கும் நல்ல வேலைத் திட்டங்கள், அதன் கொள்கை, அதுகடைப்பிடித்து இயங்கிவரும் சீரான வழி.

இன்று இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை, அது பெற்றுவரும் பெரும் வெற்றியை பிரச்சினைகளில் தொழிலாளர் கழகம் எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டு பிறர் வியக்கின்றனர். அதனால் பொறாமையும் கொள்ளுகின்றனர்.

தமிழனை தமிழனாக வாழவிடு என்ற தரமான கொள்கை கொண்டுள்ள தொழிற் சங்கம் மலையகத்தில் தொழிலாளர் கழகத்தை விட வேறு ஒன்று இருக்கமுடியாது.

தோட்டப்பகுதி பிள்ளைகளுக்கு உயர் வகுப்புவரை தாய் மொழியிலேயே கல்வி இருக்க வேண்டும், என்ற கொள்கையை எந்த தொழிற் சங்கமும் கொண்டிருக்கவில்லை கழகத்தை தவிர.

### கழகத்தில் சேருங்கள்

அது மாத்திரமன்றி, இலாபத்தில் பங்கு, பாரபட்சமின்றி காணி பெறும் உரிமை, சுகாதார வசதியுடன்கூடிய வீட்டு வசதி, சுகவீனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதத்தில் பாதிச்சம்பளம், நிவாரணையாக வழங்க வேண்டும், மாதச்சம்பளம், வாரத்தில் பெண்களுக்கு 40 மணிநேரமே வேலை இப்படி நல்லபல கொள்கைகளை தன்னகத்தே வைத்து சேவை செய்து வருகிறது கழகம்.

## தோட்டத் தமிழர்களின் வாழ்வு வளம்பெற இ.தொ.க. திட்டங்களே என்றும் சிறந்தவை

ஆகவே தரமிக்க கொள்கைகளைக் கொண்டு தமிழர்களை வாழவைக்கும் தமிழரசுக் கட்சியின் ஆதரவின் கீழுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வழி நின்று இழந்த உரிமைகளைப் பெற்று அனைவரும் ஒன்றுபட்டு நல்வாழ்வு வாழ்ந்திட வருமாறு மலையகத்தின் தொழிலாளர் வர்க்கத்தை[illegible]

## அப்பீல் நிதிக்கு ஆயிரம் ரூபா நன்கொடை

பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட விருக்கும் கோமஸ்வரன் மொழி வழக்கு உதவி நிதிக்கு தமிழரசுக்கட்சி ரூபா 1000 நன்கொடை வழங்கியுள்ளது என்று கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் சுதந்திரனிடம் கூறினார்.

## கிளிநொச்சித் தொகுதியில் 6 விவசாய முகாம்கள்

கிளிநொச்சித் தொகுதியில் 6 விவசாயப் படை முகாம்களை நிறுவ உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகவலை கிளிநொச்சி எம். பீக்கு துணை அமைச்சர் திரு. கப்ரின் செனிவிரத்தின தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சித் தொகுதியில் 6 விவசாயப்படை முகாம்கள் நிறுவப்பட வேண்டுமென ஏற்கெனவே திரு. இரத்தினம் துணை அமைச்சரிடம்கோரியிருந்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் விவசாயப் படைக்கு விண்ணப்பித்த 8000 பேர்களில் தெரிவு செய்யப்பட்ட 3000 பேரில் எவருக்கும் இன்னும் வேலை வழங்கப்படவில்லையென்றும் திரு. இரத்தினம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## தகவல்கள் தயாரா?

'இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கு வேண்டிய ஆவணங்களை இப்பொழுதே மலையகமக்கள் சேகரித்து தயாராக வைத்துக்கொள்ள முன்வர வேண்டும். இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் கோரப்படும் போது உடனடியாக விண்ணப்பிக்க அவை உதவியாக இருக்கும்' இவ்வாறு மலையக தொழிற் சங்க வட்டாரத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

'இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படலாம். அப்பொழுது உடனடியாக விண்ணப்பம் அனுப்பக் கூடிய முறையில் இப்பொழுதே வேண்டிய ஆவணங்களையும் தகவல்களையும் மலைநாட்டுமக்கள் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

'1948ம் ஆண்டு முதல் இலங்கையில் தொடர்ந்து வசித்து வருவதாக உறுதிப்படுத்தும்படி கேட்கப்படலாம். அதற்கு வேண்டிய அத்தாட்சிப் பத்திரங்களை தேடி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உறுதிப் பத்திரங்களை தாங்கள் வேலை செய்யும் தோட்டங்களின் உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

'தோட்டங்களில் வேலை பார்க்காதவர்கள் இலங்கையில் வாழ்ந்த காலத்துக்கு அவ்வப்பகுதி பிரிவுக்காரியாதிகாரிகளிடமிருந்து உறுதிக் கடிதம் பெற்றுக் கொள்ளலாம்—

'பிறப்பு, இறப்பு விவாகப்பதிவு பத்திரங்களையும் முற்கூட்டியே எடுத்துவைத்துக்கொள்வது நன்று.

'இந்த வகையில், மலையக மக்களுக்கு அவர்களின் நன்மையில் அக்கறை கொண்ட தொழிற் சங்கங்கள் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர் வேலைக்கு வருமுன்பு சவரிமுத்து நுழைகிறாம்

'வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்கத் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் சிங்கள ஊழியர்களை ஒதுக்கிவிட்டு தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்களான தமிழ் அதிகாரிகளை அந்த இடங்களில் நியமனம் செய்வதற்குத் தமிழரசுக்கட்சி நடத்தும் இரகசிய முயற்சியை அம்பலப்படுத்தும் மற்றொரு சான்று 'எத்த' பத்திரிகைக்கு கிடைத்துள்ளது' என்று எத்த 29-9-67ந் திகதி சிங்களவர் வருமுன்பு சவரிமுத்து நுழைகிறார்' என்று மகுடமிட்டு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது'.

அச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

'வேறு சிங்கள அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட முன்பு தமிழரசுக்கட்சியின் ஆதரவாளரான சவரிமுத்து என்பவரைத் திருகோணமலை இ. போ. ச. நிர்வாக சபையின் உதவி அதிகாரியாக நியமனம் செய்விப்பதற்காக தமிழரசுக்கட்சித்தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் மூலமாக நல்லூர் பிரதேச தமிழரசுக்கட்சி தலைவரான திரு. ஆலாலசுந்தரம் செய்த ஒரு முயற்சியை இச் செய்தி அம்பலப்படுத்துகிறது.

'இந்த அதிகாரியை அந்தப் பதவிக்கு நியமித்தல் நமது தொழிற்சங்கத்தின் நோக்கங்களுக்கும் இதர நோக்கங்களுக்கும் பயன்படும்' என்று திரு. ஆலாலசுந்தரம் டாக்டர் நாகநாதனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுளளார்.

'செப்டம்பர் முதற்திகதிக்கு முன்பு சிங்கள அதிகாரி ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு இடமிருப்பதால் இந்தப் பிரச்சினையைத் தாமதமின்றித் தீர்க்கவேண்டுமென்பது எனது கருத்தாகும்' என்று அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.'

(டாக்டர் நாகநாதனுக்கு திரு. எம். ஆலாலசுந்தரம் எழுதிய கடிதத்தின் சிங்கள மொழிபெயர்ப்பையும் 'எத்த' ஏடு பிரசுரித்துள்ளது.)

## ஏன் இந்த பாரபட்சம்?

''அரசாங்க வர்த்தமானியில் சிங்களத்தில் வெளியிடப்படும் செய்திகள் யாவும் தமிழிலும் வெளியிடப்படுவதில்லை. இதனால் தமிழ்மக்கள் கஷ்டமடைகிறார்கள். ஆகவே உரிய நடவடிக்கை யெடுத்து சிங்களத்தில் வெளிவரும் சகல செய்திகளும் தமிழிலும் இடம் பெற ஏற்பாடு செய்யுங்கள்.'' இவ்வாறு கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம், இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை கோரியுள்ளார்.

இவ்விஷயம்பற்றி உருத்திரபுரம் மேற்கு இ. த. அ. கட்சிக்கிளை கிளிநொச்சி எம். பீயிடம் முறையிட்டதைத் தொடர்ந்தே திரு. இரத்தினம் இராசாங்க அமைச்சரிடம் மேற்கண்டவாறு கோரிக்கைவிடுத்துள்ளார்.

## நவராத்திரி பூசை விழா.

கம்பளை கலகா சிறிபுரம் பாடசாலை இந்து மாணவர் மன்றத்தின் சார்பில் சென்ற 4ந் திகதி தொடக்கம் நவராத்திரி பூசை நடைபெற்று வருகிறது. பிரம்மஸ்ரீ. கே. செல்லையாக் குருக்கள் விழா வைத்தொடங்கி வைத்தார் பூசை நாள் தோறும் நடைபெற்று வருகிறது. தலைமையாசிரியர் திரு. கே. ஏ. புஞ்சிபண்டார ஆசி கூறினார். தலைவர் திரு. ந. செல்வநாயகம் ஆசிரியர் நன்றியுரை கூறினார்.

இதனையடுத்து 12ந் திகதி சரஸ்வதி பூசையும், விஜயதசமியன்று வித்தியாரம்பம் (ஏடு துவக்குதல்) விழாவு விரிவான முறையில் நடைபெறவுள்ளது. இதற்காகப் பெற்றோரும் பெரும் ஒத்துழைப்பு நல்கிவருகிறார்கள்.




## என். எம்.முக்கு ஜயசூரியா பதில்

''யாழ்ப்பாண மாநகரசபையை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கலைத்தது நியாயமானதே உள்ளூராட்சி கமிஷனர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலேயே அமைச்சர் அந்த நடவடிக்கையையெடுத்தார். இது சம்பந்தமாக அமைச்சரை எவரும் குறைகூறுவது நியாயமாகாது.''

இவ்வாறு மூதவையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் இறுதியில் பேசிய மூதவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. பி. ஜெயசூரியா கூறினார். திரு. ஜெயசூரியா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் உள்ளூராட்சி அமைச்சராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாநகரசபையை அமைச்சர் திருச்செல்வம் கலைத்தது தவறு என்றும், தமிழ்ப்பகுதிகளுக்கு அதிக பணம் ஒதுக்கினார் என்றும் சனப்பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினரும் குற்றஞ் சுமத்தப்பட்டதல்லவா? அமைச்சர்மீது அப்படிக் குற்றஞ் சுமத்துவது தவறு என்பதை செனட்சபையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரான திரு. ஏ. பி. ஜெயசூரியா தம் கட்சிக்காரர்களுக்கு எடுத்துக் கூறினார்.

அவர் மேலும் பேசும்போது 'உள்ளூராட்சி மன்றங்களுக்கு நன்கொடை வழங்குவதில் அமைச்சர் பாரபட்சமாக நடந்து வருவதாகக் கூறுவது நியாய மற்ற கூற்றாகும். இந்த அமைச்சர் அப்படிப்பட்டவரல்லர். யாழ். மாநகரசபை அமைச்சரால் கலைக்கப்படு முன் சீர்கேடான குழப்ப நிலையிலேயேயிருந்தது'' என்றும் குறிப்பிட்டார்.

## அமிர் நடவடிக்கை

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குள் நிலமற்று இருக்கும் சிறுபான்மை மக்களுக்கு குடியிருக்க நிலங்களைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஈடுபட்டுள்ளார்.

## தவறான செய்திக்கு மறுப்பு

''தமிழரசுவாலிபமுன்னணி தன்னிச்சைப்படி இயங்குமா? என்ற தலைப்பில் 1-10-67 மாலைத் தினசரியொன்றில் வெளிவந்த செய்தி மிகத்தவறானதாகும். அதில் குறிப்பிட்டுள்ளது போல எமது வாலிபமுன்னணி கட்சிக்குள் கருத்து வேறுபாடான இரகசிய சுற்று நிருபம் எதுவும் எந்தக்கிளைக்கும் அனுப்பப்படவில்லை, அனுப்ப வேண்டிய தகராறுகள் எதுவும் ஏற்படவும் இல்லை.'' இவ்வாறு தமிழரசு வாலிப முன்னணி நிர்வாகச் செயலாளர் திரு. சி. பாலசிங்கம் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:—

''கட்சியின் இலட்சியங்களுக்காகவே கட்சி பாடுபடுகின்றது. அந்த இலட்சியங்களைச் செயற்படுத்துவதும், அதற்காக போராடவும், கட்சியின் இயக்க அணியாகவே வாலிப முன்னணி இயங்குகின்றது. தமிழினத்தின் உரிமைகளுக்காக எமது கட்சி கொள்கை வழி நின்று கட்சியுடன் சேர்ந்து போராடுவதே தவிர தனித்து [illegible] இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.''

## தமிழ் பகுதிகளிலே..

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பஸ் சேவை சீர்கேடு குறித்து சுன்னாகம் பட்டினசபை இ. போ. ச. அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய அபிவிருத்திக்கு அரசாங்கம் 6 கோடியே 39 லட்சம் ரூபாவை கடனாக வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மூதூரில் உள்ள தபால் நிலையத்துக்கு வானொலித் தொலைபேசித் தொடர்பு வசதியும், தன்னியக்கப் பரிவர்த்தனை நிலைய வசதியும் விரைவில் பொருத்தப்படும்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு 'ஜெனரேட்டர்' என்னும் மின்சார இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை குடியேற்றத் திட்டத்தின் கீழ் 6544 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

2000 ஏக்கர் காணிகள் 1968 ம் ஆண்டு குடியேற்றத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் விநியோகிக்கப்படும்.

பருத்தித்துறை, பளை, கிளிநொச்சி, ஆகிய இடங்களில் தன்னியக்க தொலைபேசி இணைப்பு நிலையங்கள் மூன்று மாதங்களுக்குள் நிறுவப்படவிருக்கிறது.

ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, காரைநகர், பருத்தித்துறை, பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் புதிய தபாற் கந்தோர்கள் நிறுவப்படவுள்ளன.

தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் ஆரம்பகாலத் தொண்டருமான கிளிநொச்சியைச் சேர்ந்த ஆ. சி. முருகேசு கிளிநொச்சி எம். பீயின் சிபார்சின் மீது அமைதியில் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார்.

கிளிநொச்சிக்குக் குழாய் நீர் வழங்கல் பற்றி கடந்த இரண்டு வருடங்களாக திரு. கா. பொ. இரத்தினம் உள்ளூராட்சி அமைச்சரை வற்புறுத்தி வந்ததைத் தொடர்ந்து அமைச்சர் குழாய் நீர் வழங்கல்பற்றி ஆய்வு நடத்துமாறு பணித்துள்ளார்.

பரந்தன் புகையிரத நிலையத்தைப் புதுக்கி அமைக்குமாறு கிளிநொச்சிப் பா. உ. வற்புறுத்தியுள்ளார். விரைவில் திருத்தியமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. மின்சார வெளிச்சவசதியும் அளிக்க வேண்டுமெனவும் அவர்கேட்டுள்ளாரெனஅறியப்படுகிறது.

கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு பஸ்கள் போதாதெனவும் பஸ் சேவை சீர்கெட்டுள்ளதெனவும் கிளிநொச்சி எம். பி. தேசிய மயச்சேவை அமைச்சருக்கு புகார் செய்து வந்ததைத் தொடர்ந்து இரண்டு புதிய பஸ்கள் கிளிநொச்சி பஸ் நிலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

மாநகல், சில்லாலை, மாரீசன்கூடல், இளவாலை, விளான், முள்ளானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மாதகல் அர்ச் சூசையப்பர் கல்லூரியை கனிஷ்ட கல்லூரியாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

உரெழு விலிருந்து உரும்பிராய் ஊடாக யாழ். இந்துக்கல்லூரிக்கு புதிய பாடசாலை பஸ் சேவையொன்று விட வேண்டுமென தமிழரசு வாலிப முன்னணி பட்டதாரி இ. போ. ச. முகாமையாளரை கோரியுள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் முட்டைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு நெல்விளைச்சல் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சங்கானையில் சாதிக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்கப்பட வேண்டுமென சங்கானை பட்டினசபை அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது.

கல்முனை பாத்திமா கல்லூரி கோஷ்டிக்கும் கல்முனை பஜார் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பஜார்கோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

காரைநகரில் இ. போ. ச. உபநிலையமொன்று நிறுவப்பட்டுள்ளது.

கோப்பாயில் 600 காசநோயாளர் இருப்பதாக நிவாரண சங்க செயலாளர் அறிவித்திருக்கிறார்.

நாரந்தனை கிராமசபை சரவணை நாற்சந்திக் கருகாமையில் ஒரு பொதுக் கிணறு அமைக்க தீர்மானித்திருக்கிறது.

அனாதைப் பெண் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் கருமபுரத்தில் 'கஸ்தூரிபாய் நிலையம்' ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

வேலணையிலுள்ள 10 ஆரம்பபாடசாலைகளில் பலவற்றில் பல வருடங்களாக ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

தனிப்பட்ட முறையில் நெசவுத் தொழில் செய்பவர்களால், 'நெசவு உரிமையாளர் சங்கம்' ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த கிளாலி கிராமத்துக்கு பஸ் சேவை இன்மையால், அப்பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இதுபற்றி திரு. இரத்தினம் எம். பீக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## விபுலானந்தர் சிலைகளுக்கு விழா

ஆசிரியர் புல்லுமலை நல்லரெத்தினம் வடித்த வித்தகர் விபுலானந்த அடிகளின் 12 சிலைகளை விநியோகிக்கும் விழா கலைவாணி விழாவினையொட்டி 10-9-67 ந் திகதியன்று ஆரையம்பதி பரமன் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும்.



சிற்பி நல்லரெத்தினம்

சிற்பி நல்லரெத்தினம் பரமன் சன சமூக நிலையத்திலிருந்து ஆரையம்பதி மகாவிஷ்ணு ஆலயம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். சிலைகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும். கலைஞருக்குப் பொற்கிழி வழங்கப்படும். திரு. இராசதுரை எம். பீ. விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இச் சிற்பங்களுக்கு அச்சுப் போட்டவர் திருமதி மகேஸ்வரி நல்லரெத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகள் முடிந்துவிட்டன எங்கே உங்கள் திட்டம்?

"1957ம் ஆண்டு இந் நாட்டுத் தமிழ் பேசுமினத்துக்கு இழந்த உரிமைகளை மீண்டும் கிடைக்க வழி வகுக்கும் ஒப்பந்தம் ஒன்றை தமிழரசுக் கட்சி காலஞ் சென்ற திரு. பண்டாரநாயகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி உருவாக்கியது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற விடாது வட இலங்கையில் தமிழ் காங்கிரஸ் கட்சியினரும் தென்னிலங்கையில் பௌத்த பிக்குகளும் கிளர்ச்சி செய்தனர். இதன் பயனாக ஒப்பந்தம் கைவிடப்பட்டது. பண்டா—செல்வா ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டதும் வேறுதிட்டம் தருவோம் என்று மேடைக்கு மேடை கூறித்திரிந்தார்கள் பொ. கட்சியினர். பத்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்று வரை எந்தத் திட்டத்தையும் காணோம். ஆனால் மீண்டும் இப்போது ஐ.தே.கட்சியுடன் நாம் செய்த உடன் படிக்கை காரணமாக வரவிருக்கும் மாவட்டசபைகளை எதிர்த்து கூச்சல் போட ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த பித்தலாட்டக்காரர்களின் நோக்கத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.'

இவ்வாறு நீர்வேலியில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில் பேசிய மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரை கூறினார்.

திரு இராசதுரை பேசுகையில் கூறியதாவது:—

'எழுபதாம் தமிழ் பேசுமினத்தை ஒற்றுமையுடன் ஒன்று சேர்த்த ஒரே இலட்சியத்துடன் ஒரு சோர்வின்றி உழைத்து தமிழினத்தின் ஒப்பற்ற தமிழரசுக்கட்சியினை அமைத்து அதற்செனத் தம் வாழ்வினை அர்ப்பணித்து பெருமைக்குரியவராக வாழ்ந்தவர் அமரர் திரு. வன்னியசிங்கம்.

'திரு. வன்னியசிங்கம் அவர்கள் கிழக்கு மாகாணத்தின் மீதும் மாகாண மக்கள் மீதும் கொண்ட அன்பும் உரிமையுமே இன்றுஎம்மையெல்லாம் ஒன்று சேர்த்துவைத்துள்ளது.



'1956 ம் ஆண்டுஅவர் நமது கட்சியின் போராட்டத்தின் முதற் படியாக அமைந்த காலிமுக மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்திலே தளகர்த்தராக நின்று அஞ்சா நெஞ்சுடனும் ஆண்மையுடனும் சக்தியுத்துடனும்போராடியதன் விளைவாகவே 1957ம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் தமிழ் பேசும் மக்களின் உரிமை ஓரளவு பாதுகாக்கப்பட்டது.

'ஆனால் அதே நேரத்திலே தான் திரு பொ. சோவ்மியினர் வட மாநில மக்கள் மத்தியில் எமது கட்சியினால் சொண்டு வரப்பட்ட ஒப்பந்தத்தை எதிர்த்து பிரசாரம் செய்து ஒப்பந்தம் தேவையில்லை, வேறு திட்டம் தருகிறோம் என்றார்கள்.

'ஆனால் ஆண்டுகள் பத்தாகியும் இன்னும் அவர்கள் திட்டம் வெளியாகாதது ஏன்? என்று கேட்க விரும்புகிறேன். என்னும் அன்று ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் படியே இன்று மாவட்டசபை மசோதா வரவிருக்கின்றது.

'அன்று வடபிரதேசத்திலே பேரிடி ஒப்பந்தத்தை பொன்னம்பலம் கட்சியினர் எதிர்த்தது போலவே தென்னிலங்கையில் பௌத்த பிக்குகள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இச் சூழ்நிலையில் தான் அந்த ஒப்பந்தத்தை காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகாவை கிழித்தெறியச் செய்தது.

'மாவட்டசபைகளை பொ. கட்சியினர் பாராளுமன்றத்தில் ஆதரித்தனர்.

'ஆனால் வட இலங்கையில் கால் வைத்ததும் மாவட்ட சபைகள் தமிழ்சாதியை அழிக்கக் கூடியது என எதிர்ப்பு பிரசாரம் செய்கின்றனர்.

'ஆனால் பொ. கட்சியினரின் இக் கபட நாடகம், பசப்பு மொழிகள் பித்தலாட்டவார்த்தைகளில் தமிழ் பேசுமினம் ஒருபோதும் ஏமாந்து விடாது என நான் அவர்களுக்கு கூறி வைக்க விரும்புகிறேன்.'

பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

'அமரர் வன்னியசிங்கத்துக்கு விழா வெடுப்பதால் மட்டும் அவரின் இலட்சியங்களை நிறைவேற்றி விட்டோமெனக்கூற முடியாது. அவரது வாழ்விலே அவர் விட்டுச் சென்ற இலட்சியங்களான சமஷ்டி ஆட்சி கூட்டுறவு அபிவிருத்தி, தமிழ் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி முதலியன நிறைவேற முன்னின்றுழைக்க வேண்டும். அப்பொழுதே அவர் கண்ட கனவை நாம் நனவாக்கமுடியும். இவைகளுக்கு மேலாக அவர் நமக்கு விட்டுச் சென்ற பணி தீண்டாமை ஒழிப்பியக்கம்.

'இதற்கு நாம் நீண்டகாலத்திற்கு தீர்வு காணாது விடுவோமாயின் தமிழின மக்கள் மத்தியில் மீண்டும் வேற்றுமை உண்டாக ஏதுவாகும். எமது சைவசமய வளர்ச்சி குன்றும். ஆகவே தமிழ் மக்கள் அன்பு வழியிலே, சாத்விக நெறியிலே தீண்டாமை என்னும் பேயை ஒழித்து விரட்ட முன்வரவேண்டும்.'

சோப்பாய் எம். பி. சதிரவேற்பிள்ளை, அட்வக்கேட் திரு மு. ஆலாலசுந்தரம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

# இந்திய வீரர் தாராசிங்குக்கு பாகிஸ்தான் வீரர் சவால்!

இந்திய மல்யுத்த வீரர் தாராசிங்குக்கு பாகிஸ்தான் மல்யுத்த வீரர் அக்ரம் பயில்வான் மல்யுத்தத்துக்கு வரும்படி சவால் விடுத்திருக்கிறார். 'என்னை தாராசிங் வெற்றி கொள்வாரானால் நான் அவருக்கு என் சொந்த வகையில் 6000 பவுன் பரிசாக வழங்கவும் தயார் என்றும் கூறியுள்ளார் இந்தப் பாகிஸ்தானிய வீரர்.

பாகிஸ்தானின் சிறந்த மல்யுத்த வீரராக விளங்கும் போலு பயில்வானைதம் முடன் மல்யுத்தத்துக்கு வரும்படி அண்மையில் இந்திய வீரர் தாராசிங் இங்கிலாந்தில் வைத்து சவால் விடுத்திருந்தார். தாராசிங்கின் சவாலுக்குப் பதிலளித்து போலு பயில்வானின் சகோதரர் அக்ரம் பயில்வான்ஒருஅறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"தற்போது இங்கிலாந்திலுள்ள இந்திய வீரர் தாராசிங் எங்களை சவால் போட்டிக்கு அழைத்திருக்கிறார். அவரது சவாலை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அவரோடு மல்யுத்தம் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

"சவால் போட்டிக்கு அழைத்த தாராசிங் இதனை ஏற்பாரா? ஏற்பாரானால் பாகிஸ்தான் தூதர் மூலம் அல்லது பாகிஸ்தானிலுள்ள மல்யுத்த நிறுவனத்தின் மூலம் தனது ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

'போலு பயில்வானையே சவாலுக்கு அழைத்திருக்கிறார் தாராசிங். ஆனால் நான் இந்திய வீரருக்கு கூறிக்கொள்வது எல்லாம் போலுவுடன் போட்டியிடுவது இருக்கட்டும். முதலில் என்னோடு மல்யுத்தம் செய்யட்டும் என்பதுதான். இந்தப் போட்டியில் திரு. தாராசிங் என்னை வெற்றி கொள்வாரானால் நான் அவருக்கு என் சொந்தவகையில் 6000 பவுன் பரிசுத்தொகை வழங்கவும் தயாராக உள்ளேன்"

## உரும்பராயில் காணிக் கச்சேரி

உரும்பராய் பட்டினசபை எல்லைக் குட்பட்ட அரசாங்க நிலம் அப்பகுதியிலுள்ள காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது. இதற்கான காணிக்கச்சேரி 23-10-67ல் கோப்பாய்க் காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை செய்தவர்கள், உரும்பராய் தமிழரசு வாலிப முன்னணியும் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்களத் தேர்ச்சி இவர்களுக்கு தேவையில்லை!

தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கும், தமிழ் மொழி பெயர்ப்பாளர்களுக்கும் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதி விலக்களிக்க அரசாங்கம்முடிவுசெய்துள்ளது. இத் தகவலை தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்துக்கு பதில் நிதியமைச்சர் திரு. விமலசேன தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் சிங்கள மொழித் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்க வேண்டுமெனக் கோரி தமிழரசுத் தந்தை ஏற்கனவே பிரதம மந்திரிக்கும் நிதி மந்திரிக்கும் கடிதம் எழுதியிருந்தது தெரிந்ததே.

தமிழரசுத் தந்தையின் கோரிக்கையை இப்போது அரசாங்கம் ஏற்றுள்ளது. இது சம்பந்தமாக தமிழரசுத் தந்தைக்கு பதில் நிதியமைச்சர் திரு. விமலசேன எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் பிரச்சினை பற்றி தாங்கள் ஆகஸ்ட் 7ம் திகதி எழுதிய கடிதம் தொடர்பாக புதிய ஊழியர்களான தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கும், தமிழ்மொழி பெயர்ப்பாளர்களுக்கும் உத்தியோக மொழிக் கொள்கையிலிருந்து விதிவிலக்களிக்கமுடிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

# அந்தமானில் மலையக மக்களுக்கு இடமில்லை

காடுகளை வெட்டி சாலைகளை அமைத்து ரப்பரும் தென்னையும், பாக்கும் செழித்து வளரத் தம் உடலைப்பசளையாக்கி, அந்தமான் தீவை உருவாக்கிய தமிழ்ப்பாட்டாளிகளின் நிலை இன்று அங்கு திருப்திகரமாக இல்லையென்றுசெய்திகள்கிடைத்துள்ளன. அந்தமானை வாழவைத்தவர்களையே அந்தத் தீவுகள் கவனிக்காதிருக்கும்போது இங்கிருந்து பலை நாட்டுத் தமிழர்கள் சென்று குடியேறினால் அவர்களின் நிலை மிகவும் பயங்கரமாக இருக்கும் என்றும் இதை உணராது சில துரோகத் தலைவர்கள் மலையக மக்களை அந்தமானுக்கு காவு கொடுக்க முன்வருவது விந்தையாகவுள்ள தென்றும் மலையகதொழிற்சங்க வட்டாரங்கள்சுட்டிக்காட்டுகின்றன.

அந்தமான் தீவுபற்றி இப்போது "பெரிதாகப்" பேசப்பட்டு வருவதால், அந்தமானின் உண்மை நிலவரங்களை மலையக மக்கள் அறிந்து கொள்வதவசியம்.

பாரதத்தை ஆங்கிலேயர்கள் ஆண்ட நேரத்தில், சிறைக்கைதிகளை கொண்டு சென்று அந்தமானில் குடியேற்றினார்கள். அன்று [illegible] கைதிகளாக, ஊழியர்களாக அந்தமானில் குடியேற்றப்பட்டவர்களே இன்றுஅந்த நாட்டு குடிமக்களாக வாழ்கிறார்கள்.

## 3215 சதுரமைல்

இங்கு சின்னஞ் சிறு தீவுகளாக 223 தீவுகள் இருக்கின்றன. இவற்றின் பரப்பளவு 3215 சதுர மைல். ஏறத்தாழ 70038 பேர் இந்த நாட்டில் வாழுகிறார்கள். வருடச் சராசரி மழை 125 அங்குலம்.

அந்தமான் தீவின் தலைநகர் போட்பிளேயர். அந்தமானில் 16684 ஏக்கர் நிலத்தில் நெல் பயிராகிறது. இங்குள்ள 100 பள்ளிக்கூடங்களில் 5900 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு 9 பெரிய மருத்துவமனைகளும், 34 சிறிய மருந்தகங்களும் [illegible] நிலையங்களும் இருக்கின்றன.

## உதாசினம்

13600பேர் அரசாங்க ஊழியர்கள். இங்குள்ள பழங்குடி மக்கள் தொகை 14043.

இந்த நாட்டை சோலைவனமாக்கி ரப்பர், தென்னை, பாக்குதோட்டங்களை ஏற்படுத்தியவர்கள் தமிழர்கள். இவர்களை அந்தமான் இன்று உதாசீனம் செய்து, புறக்கணித்து வருகிறது.

தமிழர்களைத்தவிர இங்கு தெலுங்கர் மலையாளிகள், வங்காளிகள், இந்திக்காரர் ஆகியோரும் வாழ்ந்து வருகிறார்கள்.

## காட்டுமனிதர்கள்

அந்தமானில் சில தீவுகளில் காட்டுமனிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் நிறத்தில் கன்னங்கரேலென்று காணப்படுகின்றனர். ஆடை அணிய மாட்டார்கள். இப்பொழுது இந்த மக்களில் ஒரு பகுதியினர் திருந்தி வருகிறார்கள் என்றாலும் இன்னும் "அசல்" காட்டுமனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்தக் காட்டுமனிதர்கள் தப்பித்தவறி நம்மைப் போன்ற சாதாரணமனிதர்களைக் கண்டுவிட்டாலோ அம்பெய்து கொன்று விடுவார்கள்.

இத்தகைய தொல்லைகளும், பிரச்சினைகளும் நிறைந்த அந்தமானுக்கு 'இந்த நாட்டு மலையகப்பாட்டாளிகள் சென்றால் அவர்களின்கதி என்னவாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டரசாங்கத்துக்கும் தேசிய
# நிலவும் வேறுபாடு என்ன?

பொதுவாக மூதவையில் நடைபெறும் விவாதங்கள் ஒரு அரசியல் மாணவனுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதில்லை. சனப் பிரதிநிதிகள் சபையில் நடந்து முடிந்த விவாதத்தின் போது கூறப்பட்ட கருத்துக்களே அனேகமாக அங்கும் தெரிவிக்கப்படுவதால் மூதவை விவாதங்கள் பொதுவாக சோர்வையேற்படுத்தக் கூடியனவே.

**'போர்' அடிக்கும் சபை**

மூதவை விவாதங்களின் போது பார்வையாளர்களாக இருந்த பலர், அவ்விவாதங்களைக் கேட்கும் போது தூக்கம் வரும் நிலை தங்களுக்கு ஏற்படுவதாக என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவர் என்னிடம் மூதவை உறுப்பினர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது 'போர் அடிக்கும் கூட்டத்தினர்' என்று கூறினார். இதை நான் ஆதரிக்கவோ எதிர்க்கவோ முடியாதவனாக இருக்கிறேன். ஏனெனில் எமது மூதவை உறுப்பினர்களின் நடவடிக்கைகளை நான் ஒரு நாளும் பார்வையிட்டதில்லை.

ஆனால் அண்மையில் (செப்டம்பர் 22ந் திகதி) ஒரு ஆத்திர மூட்டும் பேச்சு மூதவையில் நிகழ்த்தப்பட்டது. இந்தப் பேச்சு கலரியிலிருந்த பார்வையாளர்களை சிந்திக்கத் தூண்டியது போலக் காணப்பட்டது.

**தேசிய அரசாங்கம் என்று ஏன் கூறக்கூடாது?**

இப்பேச்சை நிகழ்த்தியவர் செனட்டர் ஹமீம். தேசிய அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத்திட்டம் பற்றி அவர் பேசினார். அரசியல் லாபம் ஒன்றைக் கருதியே ஏழு கட்சியை ஒன்று சேர்த்து திரு. டட்லி சேனநாயகாவால் தேசிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டதென்றும் ஆனால் முன்னைய அரசாங்கத்தின் கூட்டோ இரு கட்சிகளை மட்டுமே கொண்டதென்றும் அவர் புகார் கூறினார்.

பல அரசியற் கட்சிகளின் ஆதரவையும், சனப் பிரதிநிதிகள் சபையின் பெரும்பாலான உறுப்பினர்களின் நம்பிக்கையையும் கொண்ட ஒரு அரசாங்கம், தன்னை தேசிய அரசாங்கம் என்று ஏன் கூறிக்கொள்ளக் கூடாது?

எத்தனை குழுக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட போதிலும், நாட்டுமக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றுள்ள அமைப்பே தேசிய அரசாங்கம் என்பது எம்மில் பலருக்கு மாணவர்களாக இருந்த காலத்தில் சொல்லித் தரப்பட்டிருக்கிறது.

சுதந்திரக்கட்சி—சமசமாஜக்கட்சி கூட்டுச் சேர்ந்து அமைத்த அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் என்று கூறுவது நீதியானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் கூட்டரசாங்கம் தேசிய அரசாங்கம் என்ற அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. பல வேறு இன, மதவாரி மக்களின் பிரதிநிதிகள் கூட்டரசாங்கத்தில் இடம் பெற்றிருக்கவில்லை.

முந்திய கூட்டு அரசாங்கம் இயங்கிய முறையைக் கொண்டு பார்க்கும் போது, சம சமாஜ—சுதந்திரக் கட்சி இணைப்பு ஒரு தொய்ந்த இணைப்பாகவே காணப்பட்டது. கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த சில குழுவினர் மார்க்சிய சித்தாந்தங்களில் சிறிதும் நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் எல்லோரும் பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை ஆதரித்தனர். ஏனெனில் பத்திரிகைகள் கூட்டரசாங்கத்தின் கொள்கைகளை அக்குவேறு ஆணிவேறாக்கி அம்பலப்படுத்தி வந்தன.

**சர்வாதிகாரத்தைதிணிக்க முயற்சி**

தாம் கண்டிக்கப்படுவது கூட்டரசாங்கத்தினருக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அதனால் நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியை திணிப்பதில் அவர்கள் மும்முரமாக முயற்சித்தனர்.

செனட்டர் ஹமீம் அழுத்தமாகக் கூறிய 14 அம்சம் எடபடியிருந்த போதிலும், கூட்டரசாங்கம், தான் சனநாயகத்தின் எதிரி என்பதை தெளிவாக நாட்டுக்கு உணர்த்திக் காட்டிவிட்டது.

சுதந்திரக் கட்சித் தலைவியார், பத்திரிகைகளை அரசுடைமையாக்குவது பற்றி இரகசியமாகவே வைத்திருந்தார். பத்திரிகைகளில் கை போடும் தனது எண்ணத்தை வாக்காளர்களிடம் அவர் பகிரங்கமாக கூறியிருந்தால், வாக்காளர்கள் அவருக்கு என்ன பதில் சொல்லியிருப்பார்கள் என்பது பற்றியே நான் சிந்திக்கிறேன். என்றாவது அரசாங்கம் அமைப்பதற்கு அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்க முடியுமா?

ஆகவே, தேசிய அரசாங்கத்தில் அமைந்துள்ள தேசியத் தன்மையை உணராமல், இப்போதைய பிரதமருக்கும், தமிழரசுக் கட்சிக்குமிடையிலான இரகசிய ஒப்பந்தம் என்ற கற்பனையில் செனட்டர் ஹமீம் மிதக்கிறாரென்றே கூற வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள எல்லாப் பகுதி மக்களின் நலன்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் இப்போதைய தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. சனநாயகத்தின் தத்துவம் எல்லாப் பகுதி மக்களின் நலன்களையும் போற்றுவதே.

**கருத்து வேறுபாடு எங்கும் உண்டு**

செனட்டர் ஹமீம் செய்தது போல, குறித்த ஒரு சமூகத்தைச் சேர்ந்த அரசியற் தலைவர்களிடையேயுள்ள வேறுபாடுகளை சுட்டிக்காட்டுவது மடைத்தனமானது. அத்தகைய கருத்து வேறுபாடுகள் சிங்கள சமூகத்திடையும் காணப்படுகிறது. இரண்டு முஸ்லிம்கள் தேசிய அரசில் இன்று பதவி வகித்த போதிலும், முஸ்லிம் தலைவர்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. மக்கள் பல்வேறு சிந்தனைகள் உள்ளவர்களாக இருப்பதால் அரசியல் கருத்து வேறுபாடுகள் எப்பொழுதும் இருக்கத்தான் செய்யும்.

சுதந்திரக்கட்சி—சமசமாஜக்கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகள், எல்லாம் பிரச்சினைகளிலும் ஒரே மாதிரி கருத்து வெளியிடுவதில்லையென்றும் (அது உண்மையும் கூட). அதனால், அவர்களுக்கிடையில் எவ்வகையிலும் ஒற்றுமையில்லையென்றும் ஒருவர் கூறக்கூடும். சொற்கள் மீது ஏற்படும் சச்சரவுகளுக்கு அரசியலில் இடமில்லை.

**முரட்டுத்தனம்**

இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் மத்தியிலுள்ள இடைவெளியை குறுக்குவதில் தேசிய அரசாங்கம் தவறிவிட்டது என்று செனட்டர் ஹமீம் குற்றஞ் சாட்டினார். அக் குற்றச்சாட்டு பொருட்படுத்தக்கூடியதல்ல. 1965ம் ஆண்டுக்கு முந்திய அரசாங்கம் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்டே அமைக்கப்பட்டிருந்தது. ... தும் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் சம நிலையேற்படுத்தும் பிரச்சினையில் ...

உடைந்து விடும் நிலையேற்பட்டது.


முதலாவது உலக யுத்தத்தின் போது பிரித்தானியாவின் பிரபல வெளிநாட்டு அமைச்சராக விளங்கிய சார்லஸ் ஜேம்ஸ் பொக்ஸ் பற்றி ஒரு கதையுண்டு. அவர் தனது காலத்தில், காமன்ஸ் சபையில், சிறந்த தர்க்க வாதியாகவும் பேச்சாளராகவும் விளங்கினார் அவர் ஒரு முறை ஒரு விவசாயியின் குடிசைக்கு வாக்கு வேட்டையாடுவதற்கு சென்றாராம். அந்த ராஜதந்திரியை வீட்டு வாசலில் கண்டதும் விவசாயி ஒரு தூக்குக்கயிற்றை கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான்.

இதைக்கண்டு பொக்ஸ் மனம் தளர்ந்து விடவில்லை. அவரது முகத்தில் புன்னகை வேசத்தில் வெளிவரத்து: 'நன்றி, நான் உமது ஒடுபடத்தில் எஞ்சியுள்ள ஞாபகார்த்த பொருளையும் உன்னிடமிருந்து அபகரிக்க மாட்டேன்' என்று கூறினார்.

அடுத்த தேர்தல் வந்தது. மீண்டும் பொக்ஸ் அவ்விவசாயி வீட்டுக்குப் போனார். ஆனால் இச்சமயம் பிரபல

## வாக்குச் ...
## ஒரு வசீ...

அழகுபொண்யான டங்காஷயர் இளவரசியையும் தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார். இம்முறை, விவசாயி முன்பைவிட மரியாதையுடன் நடந்து கொண்டான். ஆனால் இளவரசி தனக்கு முத்தம் கொடுத்



மேல் விபரங்களுக்கு
இன்றே எழுதுங்கள்

**சென்ற் அந்தனிஸ் இன்டஸ்றீஸ் குழு**
752/1, பேஸ்லைன் ரோட்டு,
கொழும்பு 9.
தொலைபேசி — 92161 — 92162.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்குமிடையே

தால் பட்டுமே தான் வாக்களிக்க முடியும் என்று கூறினன். விவசாயி அருவருப்பாக்காட்சியளித்துப் கூட,இளைஞரி சவ்விச்சையிலைய முத்ட்ட நேர்ட்டது. அத்தோதமில்டல ஆயிரச் சணக்கான வாக்குகள் பெரும்பான்மையுடன் பொக்ஸ் வெற்றி பெற்ருர்.

இலங்கையில் இதுமாதிரி சட்டவங்கள் ஒருபோதும் ஏற்

## ...சேகரிக்க

## ...கர வழி

...பட முடியாது. இந்த நாட்டிலுள்ள ஆண்வாக்காளருக்கு ...ன்னவை தைர்வுப் கிடையாது; வேட்டாளரின் ...டேன் ஆதரவாளர்களும் மிகவும் நானுமுள்ளனர் கள். ...ஆளுல் பலயும் சட்ட நிருடண

சபைக்காலத்தில் மந்திரியாக இருந்த ஒருவருடன் வாக்கு சேகரிக்க சேர்ந்த போன ஞாபகம் எனக்கு வருகிறது. அவர் அப்பொழுது தனக்கு வாக்கு சேர்ட்டதில உதவி புரிய எந்தப் பெண்ணையும் அழைத்துச் செல்லவில்லை.

வாக்குச் சேகரிக்க சென்ற போது, அவர் தாய்மார்களின் தோள்களில் இருந்த குழந்தைகளை தனது தாடையால் தடவிக்கொடுப்பதில் இன்பமடைந்தார். அவர் தனது தொகுதியில் 2000க்கு மேற்பட்ட பெரும்பான்மை வாக்குகளால் மீண்டும் வெற்றியடைந்தார்.

அவரிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர் இன்னெருவர். இவர் இலங்கை தேசிய காங்கிரசுக்கு எதிராக தொடக்கப்பட்ட இலங்கை லிபரல் லீக்கின் பிரபலமான உறுப்பினராக இருந்த போதிலும் வென்று கொடுக்காதவர் என்றும், மிதமான பண்பாண்மை கொண்டவர் என்றும் வர்ணிக்கப்பட்டவர். இவர் எனது ஆலோசனையைக் கேட்க முற்ருக மறுத்து விட்டார்.

சனப்பிரதிநிதிகள் சபையின் முதலாவது பொதுத் தேர்தல் நடக்கு முன்பு கொழும்பை அடுத்துள்ள ஒரு இடத்திற்கு இவருடன் சேர்ந்து வாக்குச் சேகரிக்க செல்ல நேர்ந்தது. அக்காலத்தில் இவர் ஒரு பெரும தேசியவாதியாக விளங்கியும் கூட 6000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இவருடன் போட்டியிட்டவர் அரசியலுக்குப் புதியவரென்ருலும் அன்னருக்காக பெண் ஆதரவாளர்களும், இரு மதங்களைச் சேர்ந்த குருமாரும் இரவு பகலாக வேலை செய்தனர் இன்று அன்னர் பெருமை மிக்க ஒருவராகவும், தனது மக்களின் தலைவராகவும் விளங்குகிருர்.

கடந்த நூற்ருண்டின் ஆங்கில அறிஞர் ஒருவர் பின்வருமாறு கூறினர். "அரசியல் வாதிகள் தங்களை முட்டாள் களாக்குகிருர்கள். வழுக்கறிஞர்கள் மற்றவர்களை முட்டாள களாக்குகிருர்கள். பெண்கள் தாங்களும் முட்டாள்களாகி மற்றவர்களையும் முட்டாள் களாக்குகிருர்கள்."

தோல்வியடைந்த அந்தப் பெரியாரைப் பொறுத்த வரையில் இது முற்றிலும் உண்மையாகும்.

### தமிழரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை எதிர்க்க முடிவு செய்திருக்கிறது. தேசியமயத் திட்டத்தை ஆட்சேபித்து பிரதமருக்கு, தமிழரசுத் தந்தையும், டாக்டர் நாகநாதனும் கூட்டாக கையொப்பமிட்டு அனுப்பியுள்ள தந்தியில் கூறப்பட்டிருப்பதாவது:-

'திருமலைத் துறைமுகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு பரிகாரம் தேசியமயமாக்குவது அல்லவென்று நாங்கள் நம்புகிருேம். தேசியமயக்கொள்கை நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல சேவையளிப்பதில் தோல்வியடைந்து விட்டது.

திருமலைத் துறைமுகச்சீர் கேட்டுக்குக் காரணம் ஒருபக்கம் நிர்வாகச் சீர்கேடும் மறுபக்கம் தொழிலாளர்களின் ஆறுதல் வேலையும், கவனக் குறைவுமே.


'எங்கள் துறைமுகங்களில் திறமையாக வேலை நடக்க வேண்டியது அவசியமே. அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் சீர்திருந்தவும் முன்னேறவும் முடியும்.

'திருமலைத்தேசியமயம்பற்றி ஒரு முடிவு எடுக்குமுன்பு எம்மைக் கலந்தாலோசியுங்கள். திருமலைத் துறைமுக புனரமைப்புக்கு நல்ல திட்டங்களை கூறத் தயாராக இருக்கிருேம்'.


ANTON

ஸ்லொட்டெட் ஆங்கிள்

இலகுவாகப் பொருத்தக்கூடியது.... உறுதி மிக்கது.





கட்டிட வேலைக்குப் பயன்படும் அதி நவீன பொருள்.

அன்டன் ஸ்லொட்டெட் ஆங்கிளைத் துரிதமாகப் பொருத்தலாம். துளைக்கவோ இணைக்கவோ வர்ணம் பூசவோ வேண்டியதில்லை.

சிக்கனமானது. அமைப்பதில் செலவு அதிகமிராது. நிர்மாணிப்பதற்கு அதிக நேரம் பிடிக்காது. முழுமையாக மறுமுறையும் பயன்படுத்தக் கூடியது.

உறுதி மிக்க கட்டுமானங்களை உருவாக்குகிறது. துளைகளும் துவாரங்களும் விஞ்ஞான முறைப்படி இடம்பார்த்து அமைக்கப்பட்டுள்ளமையால், பொருத்துகளிலும் மூலைகளிலும் அதிக சுரை ஆணிகளை இணைக்க இடமளிகிறது. கூடுதலான வலிமைகொடுக்கிறது. பொருத்துக்கள் ஒன்றுக்கு மேல் ஒன்ருக அமைவது மிகவும் குறைகிறது.



விநியோகஸ்தர்கள் :

சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

516, ஸ்கின்னர்ஸ் ரேட்டு தெற்கு, கொழும்பு 10.

ஹன்டர் அன்ட் கம்பனி லிமிட்டெட்,

130, பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.

உற்பத்தியாளர்கள்:

சென்ற் அந்தனிஸ் இன்ட[illegible]

762/1, பேஸ்லைன் ரேட்டு, கொழும்பு 9. தொலைபேசி – 92161 – 92162,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# எல்லைக்கோடு

பா. பாலேஸ்வரி

"வாழ்க்கையில் எதற்கும் ஓர் எல்லையுண்டு என்பது அவளுக்கு தெரியும். இப்போது அவளும் அந்த எல்லைக்கோட்டுக்கே வந்து விட்டாள். சிந்திப்பதற்கே முடியாத தீர்க்கமான முடிவுக்கு அவள் வந்து விட்டாள். அதை இனிக்கடவுளே வந்தாலும் தடுக்க முடியாத அளவுக்கு துணிவு பெற்று விட்டாள்......"

'டிக் டிக்' என்ற அலாம் கடிகாரத்தின் ஒலியைவிட அந்த அறையில் பூரண அமைதி நிலவியது. இருள் கன்னியின் பார்வையில் சிக்கித் தவித்த அந்த அறையின் மத்தியில் அழகான விரிப்புடன் கூடிய படுக்கையில் இரண்டு உயிர்கள் நித்திரையின் நித்தலித்துக் கொண்டிருந்தன. ஆயினும் ஒருவர் நிலை ஒருவருக்குத் தெரியாத வகையில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உறங்குவது போற் பாவனை செய்ய அவர்கள் பட்ட பாடு அவர்களுக்குத்தான் தெரியும். சுவரில் காற்றோட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த துவாரங்களினூடாக உள்ளே விழுந்த பின் நிலவின் கிரணங்களைவிட அந்த அறையில் இருள் மண்டிக் கிடந்தது.

டிச்டிச்! டிக் டிச்!! சடிகாரம் இயந்திரமாக இருந்தபோதும் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. அந்த ஒலியே ஒரு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. அப்போது அது வரை தூங்குவதாகப் பாவனை செய்த உருவங்களில் ஒன்று தன் பக்கத்திற் படுத்திருந்த உருவத்தை ஊன்றிக் கவனித்து விட்டு அது நன்றாகத் தூங்கிக் கொண்டு இருக்கிறது என்ற நம்பிக்கையில் எழுந்து அறைக் கதவை ஓசைப் படாமற் திறந்து கொண்டு வெளியேறுகிறது.

அறையை விட்டு வெளியேறிய உருவம் அறைக்கதவை மெதுவாகச் சாத்தி விட்டு மிகவும் வேகமாக நடந்து மாடிப் படிகளில் ஏறிச் செல்கிறது. பாவம்! அதற்கு மற்ற உருவம் தன்னைப் பின் தொடர்வது தெரிய நியாயமில்லைத்தான். அத்தனை அவசரத்துடன் அது சென்று கொண்டிருக்கிறது.

'அத்தான்...!' அந்த உருவத்தைக் கண்ட சிவகாமி தான் அலறினாள்.

'உஷ்! சத்தம்போடாதே சிவகாமி நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் தயவு செய்து நான் கேட்கப் போகும் கேள்விக்குவிளக்கமாகப் பதில் கூறு அதை மட்டும் எனக்காக அல்லாவிட்டாலும் உன்னுடன் பிறந்த அக்காவுக்காகக் கூறு. உன் வயிற்றில் வளரும் சிசுவின் தந்தை யார் சிவகாமி...?

அந்தக்கேள்வி சிவகாமியை அப்படியே உலுப்பி எடுத்தது. அந்த வினவுக்கு மட்டும் அவளால் விடை அளிக்க முடிந்திருந்தால் எல்லாமே அப்போதே சுமுகமாக நடந்து முடிந்திருக்கும். அதற்கு விடை கூறத் தெரியாமல் அவள் எப்படிப் பதில் கூற முடியும்...?

அத்தான்... மீண்டும் அதே அலறல்.

'சிவகாமி என்னை வாழவிடு. எனக்கும் உன் அக்காவுக்கும் உன் வயிற்றில் வளரும் சிசுவால் ஏற்பட்டிருக்கும் தகராறுகளை நீ அறிந்திருந்தும் என்னை ஏன் இப்படி வதைக்கிறாய். நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்... நான் அறிய ஏதாவது குற்றஞ் செய்திருக்க முடியுமென்றால் அது அன்று உன் கணவன் பார்த்திபனை உன் அனுமதியின்றி திருப்பியனுப்பியனுப்பினேனே. அதுவாகத்தான் இருக்கும். அன்றைய சம்பவத்திற்காக நான் எவ்வளவு தூரம் வருத்தப்படுகிறேன் தெரியுமா சிவகாமி...... தயவு செய்து அந்த குற்றத்திற்காக என்னை மன்னித்து என்னை வாழவிடு......

'அத்தான்...'

'அப்படி அழைப்பதில் எந்த வித அர்த்தமுமே இல்லை சிவகாமி. தயவு செய்து உண்மையை என்னிடமாவது கூறு. அதற்குப் பின் வேண்டுமானால் உன் அக்கா நினைத்திருப்பது போல் உன் குழந்தைக்குச் சட்டப்படி நானே தந்தையாகிறேன்.'

'அத்தான் தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள்... நான் மிகவும் பலவீனப்பட்டிருக்கிறேன். எனக்கு இப்போ வேண்டியதெல்லாம் நிம்மதி. ஆகவே தயவு செய்து இவ்விடத்தை விட்டுப் போய் விடுங்கள்...... போய்விடுங்கள் அத்தான்.

'சிவகாமி நீ சுலபமாகக் கூறி விட்டாய்... நான் போய் விடலாம்... ஆனால் எனக்கும் வேண்டுவது நிம்மதிதானே. நான் உன்னை ஒரு சகோதரி என்பதை விட வேறு கண் கொண்டு பார்த்ததுண்டா சிவகாமி...? அதற்காவது பதில் கூறு சிவகாமி.'

'[illegible] தான் நீங்கள் நிரபராதி[illegible] ஆனால் அதை நான் மற்ற[illegible] முன்னிலையிற் கூற முடியாமல் இருக்கிறேன். அதற்காக என்னை மன்னித்துப் போய்விடுங்கள்... அல்லது அக்காவை நான் அழைக்க வேண்டிய நிலை ஏற்படும்... சிவகாமியின் வார்த்தைகள் குழறின.

'அ[illegible]... அந்த வார்த்தையை[illegible] உனக்கு வெட்சமாயில்லை[illegible] அக்கா மீது அக்கறை அன்பு... மோசக்காரி துரோகி சண்டாளி...: ஏழ்மையால் வளர்த்துத் திருமணம் செய்து கணவன் கைவிட்டு விட்டானே என்று பரிதாபப்பட்டு உன்னை வீட்டில் வைத்து அன்பு காட்டி எங்கள் உணர்ச்சிகளை அடக்கி தங்கை ஒருவள் வாழாமல் வீட்டில் இருக்கிறாளே என்று மதிப்புச் கொடுத்து உன்மேல் அன்பு காட்டியதற்காக நீ எனக்குத் தரும் பரிசு...! பாதகி...

'என் கணவரை நான் சந்தேகிப்பது தெரிந்தும் எங்கள் இல்லற வாழ்வில் ஏற்பட்ட பெரும் பிளவைக் கண்ட பின்பும் 'அக்கா அவர் நிரபராதி' என்று கூறத்துணியாமல் நீ செய்த குற்றத்தை அவர் மேல் சுமத்தி வாழத் துணிந்த நீயும் ஒரு பெண்ணா...? உன் குணத்தை அறிந்துதான் உன் கணவன் கூட உன்னைக் கைவிட்டுச் சென்றான். இந்த நாடகத்தை அவன் எப்படிப் பொறுத்திருக்க முடியும். இப்போதே என் வீட்டை விட்டுப் போய் விடு...ம்... இன்னும் ஏன் நிற்கிறாய்...' பின்னால் வந்த உருவம் பேசித்தீர்த்தது.

'கோமதி...! வாயை மூடு... நீ எதற்காக இங்கே வந்தாய்... சிவகாமியை வீட்டைவிட்டுத் துரத்த உனக்கு என்ன அதிகாரம் உண்டு... நீ கீழே போ...ம் போய்விடு கோமதி' அத்தான் என்று அழைக்கப்பட்ட கோமதியின் கணவன் கந்தசுவாமி தான் பேசினான்.

'ம்! நல்ல கேள்வி கேட்டீர்கள்... நான் உங்கள் மனைவி என்ற உரிமையிற்தான் பேசினேன் இங்கு நான் மட்டும் இன்று வந்திராவிட்டால் இனி என்றுமே நீங்கள் என் சந்தேகத்திற்கு ஆளாகியிருப்பீர்கள். நான் வந்தது நல்லகாலம் என்று கூறுங்கள். இவளுடன் உங்களுக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கு... வாருங்கள் கீழே செல்லலாம்.

'ஆமாம்! அத்தான், அக்கா சொல்வதில் எவ்வளவோ நியாயமிருக்கிறது. நான் துரோகிதான் சண்டாளிதான் இல்லையென்றால் வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல நானே உங்கள் குடும்பத்திற் சச்சரவை உண்டு பண்ணியிருக்க மாட்டேன். பாவாயில்லை...ஏசியது அக்காதானே! கண்டிக்கவேண்டியவர் உரிமையுள்ளவர் தன் கடமையைச் செய்ததற்காக நான் ஆத்திரப்படப் போவதில்லை. அக்கா, அகால வேளையில் வெளியே போகப்போவதில்லை. காலையில் நீங்கள் எழும்புவதற்குள் நான் வீட்டைக் காலி செய்து விடுவேன். இந்த ஐந்து வருடகாலமும் என்னை வைத்துக் காப்பாற்றியதற்கு என் நன்றி...! அதற்குமேல் சிவகாமி பேசவில்லை. அவளாற் பேசமுடியவில்லை. அவள் படுக்கையில் ஓடிச் சென்று முகம் புதைக்கபோது அங்கே கேவலும் விசும்பலுமாக அறை முழுவதும் வியாபித்தது.

சிவகாமி தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள். சிறுவயதிலே தகப்பனை இழந்தாள். வளர்ந்ததும் தாயை இழந்தாள். அவள் நல்லகாலம் அவள் சகோதரி அப்போது திருமணம் செய்து குடும்பமாக வாழ்ந்ததால் சிவகாமியை ஆதரிக்க முடிந்தது. கோமதியின் கணவன் கந்தசாமியின் தூரத்து உறவினர் தான் பார்த்திபன். அவன் அடிக்கடி கோமதியின் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருப்பதால் கந்தசாமியே அவனுடன் பேசி முடிவு செய்து சிவகாமியை அவனுக்குத்திருமணம் செய்து வைத்தான்.

திருமணம் முடிந்த ஈராண்டு காலம் குடும்பம் நல்ல சந்தோஷமாகத்தான் நடந்தது. பார்த்திபனைக் கணவனாக அடைந்ததில் சிவகாமி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஆனால் அதைத் தொடர்ந்து கேடுகாலம் வரப்போவதை அப்போது சிவகாமி அறியவில்லை திடீர் எனப் பார்த்திபன் குடிக்கத் தொடங்கினான். அத்தோடு மாறியது அவன் குணம். வீட்டுப் பொருள் தொடக்கம் சிவகாமியின் நகைகள் ஈறாக முடிந்த பின் அவளைத் தனியாக விட்டு அவன் எங்கோ சென்று விட்டான். நடுத்தெருவில் நிர்க்கதியாய் நின்றவளை அணைத்து ஆதரவு காட்டியவள் கோமதி தான்.

கிட்டத்தட்ட ஆறுமாதங்களின் பின் கந்தசாமியாகவே பார்த்திபனைத் தேடிச் சென்று அவனுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறி ஒருபடியாக சிவகாமியை சேர்த்துக் குடும்பம் நடத்த வைத்தான். ஆனால் சிவகாமிக்கு நிம்மதியான வாழ்க்கை ஆறுமாதங் கூட நிலைக்கவில்லை. கோமதி எவ்வளவோ பாடுபட்டுச் சிவகாமிக்குச் செய்துபோட்ட நகைகளை எல்லாம் ஒவ்வொன்றாக முடித்துவிட்டு அவளை மீண்டும் விட்டுப் பிரிந்து விட்டான் பார்த்திபன்.

இப்படியே இரண்டாண்டுகள் சென்றன. பார்த்திபன் சென்ற இடமே தெரியவில்லை. சிலர் அவன் கடல் கடந்து சென்று விட்டதாகக் கூறினர், இன்னும் சிலர் அவன் வேலையைவிட்டு கொழும்பில் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை பார்ப்பதாகக் கூறினார்கள். ஆனாலும் கோமதியோ கந்தசாமியோ அவனைத் தேடுவதில் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை!

நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பின் திடீர் என ஒரு நாள் பார்த்திபன் கோமதியின் வீட்டில் வந்து நின்றபோது அவனை வரவேற்பதைத் தவிர வேறு எதுவுமே அவர்களாற் செய்ய முடியவில்லை. இம்முறை அவனாகவே சிவகாமியுடன் திரும்பவும் குடும்பம் நடத்தப் போவதாகக் கேட்டான்.

கோமதிக்கு பெரிய நிம்மதியாக இருந்தது. தங்கை ஒருத்தி வீட்டில் வாழாவெட்டியாக இருக்கும்போது தான் மட்டும் கணவனுடன் சிரித்துப் பேசுவது அவளுக்கு பிடிக்காத ஒன்றாக இருந்தது. ஆகவே அவள் கஷ்டப்பட்டு மீண்டும் வேண்டிய நகைகள் எல்லாம் கொடுத்து ஆசீர்வதித்து இருவரையும் அனுப்பி வைத்தான்.

ஆனால் அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. ஆமாம்! பார்த்திபன் திருந்தி விட்டான் என்ற அவள் நம்பிக்கை மண்ணாயிற்று. ஆறுமாதங்களுக்குள் மீண்டும் நிர்க்கதியாய் விடப்பட்ட சிவகாமி கோமதியிடம் திரும்பி வந்த போது கோமதி வாய்விட்டே கதறி விட்டாள்.

அதன்பின் எச் சந்தர்ப்பத்திலும் இனிச் சிவகாமி பார்த்திபனுடன்வாழ்க்கை நடத்தப் போவதில்லை என தீர்மானிக்கப்பட்டது. சிவகாமியே இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டிவந்தபோது கோமதி கந்தசாமி இருவருமே திடுக்கிட்டனர்.

அதன்பின்பு பார்த்திபனுக்கு என்ன நடந்தது என்றே தெரியாமல் வாழ்ந்தார்கள். ஆனால் சிலநாட்களுக்கு முன் மீண்டும் ஒருநாள் பார்த்திபன் அவர்கள் வாயிலில் வந்து நின்றபோது கோமதியும் கந்தசாமியும் அவனை வாயாரத் திட்டி கலைத்து விட்டார்கள். சத்தங் கேட்டுச் சிவகாமி மேலேயிருந்து கீழே வருவதற்குள் பார்த்திபன் போயே விட்டான். நடந்ததை அறிந்த சிவகாமி அதுபற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்தநாட்காலை அவள் வழமைபோல் சமையலுக்குப் பொருட்கள் வாங்குவதற்காகக் கடையை நோக்கி நடந்தபோது இடையில் பார்த்திபன் அவளைச் சந்தித்தான். அவனைக் காணாததுபோல் சிவகாமி நடந்து செல்ல முற்பட்டபோது "சிவகாமி......! என்ற குரல் கேட்கச் சிலைபோல நின்றாள். பார்த்திபனின் குரலுக்கு இத்தனை சக்தியா உண்டு! நினைத்தபோது அவளுக்கே வேடிக்கையாக இருந்தது. அந்த அழைப்பை மீறி அவளால் ஓரடி கூட எடுத்து வைக்க முடியவில்லை.

"என்னுடன் வந்துவிடு சிவகாமி' என்று பார்த்திபன் அழைத்தபோது அதைத்தட்டக்கூடிய சக்தி அவளிடம் இருக்கவில்லை. அவன் முன்னிலையில் அவன் சொல்லை எப்போதுமே அசட்டை செய்ய அவளால் முடிந்ததில்லை. "அக்காவிடம் சொல்லிக் கொள்ளாமல் வருவது அழகல்ல......ஆகவே அவர்களிடம் ஒரு வார்த்தை......' அவள் முடிக்கவில்லை.

"அப்படியானால் என்னுடன் நீ வரவே வேண்டாம் சிவகாமி. நீ என்னைச் சந்தித்தது அவர்களுக்குத் தெரியவே கூடாது. பரவாயில்லை— வா... அடுத்த தெருவில் ஒரு நல்ல ஓட்டல் இருக்கிறது. அங்கே சில நிமிடநேரம் நிம்மதியாக இருந்து பேசலாம்".

இம்முறை அவள் எதிர் வார்த்தை பேச முடியாமல் அவனைப்பின் தொடர்ந்தாள்.

ஓட்டலில் இருவரும் ஒரு தனியறையில் அருகருகே அமர்ந்திருந்தனர். அங்கே கொண்டு வரப்பட்ட குளிர் பானத்தை எடுத்து சிவகாமியின் உதட்டருகே பார்த்திபன் கொண்டு சென்றபோது சிவகாமி தன்னையே இழந்து விட்டாள்.

அவன் அன்புப் பிடிக்குள் அவள் கரங்கள் சிக்கிய போது அவளுக்கு உலகமே

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க, ரஷிய, போர் முழக்கம் பிரமாண்டமான யுத்த ஏற்பாடுகள்

ரஷியாவும், அமெரிக்காவும் ஓர் உலக யுத்தந் திற்குத் தயாராகின்றன.

அமெரிக்கா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை எதிர்த்துத் தடுக்கும் எதிர்ப்பு சாதனங்களைக் கட்டியெழுப்புகிறது.

ரஷியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சேர்ந்து மாஸ்கோவில் ஒரு பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பை நடத்தியுள்ளன

வியட்நாம் போர் அடுத்த ஆண்டில் உலக யுத்தமாக மாறிவிடுமென்று ஓர் அமெரிக்க செனட்டர் எச்சரித்துள்ளார்.

வட வியட்நாம் மீது அமெரிக்கா குண்டு வீசுவதை அகில உலகமும் கண்டிக்கிறது. ஆனால் அமெரிக்காவோ தொடர்ந்து குண்டு வீசிக்கொண்டிருக்கிறது.

இக்குண்டுவீச்சு சீனாவின் எல்லைவரை சென்று விட்டது. அது மட்டுமா?

விரைவில் அமெரிக்கப்படைகள் வட வியட்நாமில் இறங்குமென்றும் ஒரு செய்தி கூறுகிறது அப்பொழுது தான் உலகப் போர் வெடிக்கும்.

'வியட் நாம் போரின் விளைவாக உலகயுத்தம் வரவிருக்கிறது. சோவியத் மக்கள் அதற்குத் தயாராக வேண்டும். உணவு, உடையை விட இன்று யுத்த ஏற்பாடுகள்தான் மிக் மிக முக்கியம்' என்று முழங்கியுள்ளார் சோவியத் பிரதமர் கோசிஜின். இதிலிருந்து ரஷியாவில் முழு அளவில் யுத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று தெரிகிறது.

ஒன்பது சோஷலிஸ நாடுகள் மாஸ்கோவில் பிரமாண்டமான ஓர் இராணுவ அணிவகுப்பை நடத்தி தங்களின் இராணுவ பலத்தை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளன.

சீனாவின் ஏவுகணைத் தாக்குதலினின்று அமெரிக்காவைப் பாதுகாப்பதற்காகக் கோடிக்கணக்கான டாலர் செலவில் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்கள் அமெரிக்காவில் நிறுவப்படுவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் மக்னமாரா தெரிவித்துள்ளார்.

இதனை ரஷியா நம்பவில்லை. சீனாவிடம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் ஒன்று கூட இல்லாதிருக்கும்போது இந்த எதிர்ப்பு சாதனங்கள் எதற்கு? எனவே ரஷியாவின் ஏவுகணைகளை எதிர்க்கவே இந்த ஏற்பாடு என்று ரஷியா கருதுகிறது. சீனாவை சுட்டிக் காட்டுவது அமெரிக்காவின் ஏமாற்று வித்தை என்கிறது ரஷியா.

எனவே ரஷியா ஏவுகணை அணுக் கருவிகளைத் திருத்தி அமைத்து பலப்படுத்தி வருகிறதாம்.

சீனா மீது அமெரிக்கா அணுகுண்டை வீசினால், ரஷியா உடனே ஏவுகணைகளை ஏவி, அமெரிக்கா மீது ஜலவாயுக் குண்டுகளைப் பொழிந்து விடுமென்றும், ரஷியா, சீனா, கருத்துவேறுபாடுகள் இதற்குக் குறுக்கே நிற்காதென்றும் கொழும்பிலிருந்து வெளியாகும் கம்யூனிட் தினசரி (சோவியத சார்பு) ஒன்று தலையங்கம் தீட்டியுள்ளது.

---

## கட்சியின் கட்டளை

பிரிட்டிஷ் தொழிற் கட்சி அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இவ்வாரம் பலத்த அடிவிழுந்தது.

முன்னாள் தொழிற் கட்சி அரசாங்கத்துக்கும் இதற்கும் வித்தியாசம் உள்ளது. பிரதமர் வில்சனின் தொழிற் கட்சி அரசாங்கம் பெரும்பாலும் கன்சர்வேடிவ் கொள்கைகளைக் கையாண்டு வருகிறது. இதில் கட்சிக்குதன் அதிருப்தியும் குமுறலும்!

இவ்வாரம் நடைபெற்ற ஆளும் கட்சியான தொழிற் கட்சியின் வருடாந்த மாநாட்டில் வில்சனின் கொள்கை தூக்கி எறியப்பட்டது.

வியட்நாமில் அமெரிக்காவின் யுத்தத்தை பிரதமர் வில்சன் ஆதரித்துக் கொண்டிருந்தார். ஆதரிக்கக் கூடாதென்று பெரும்பான்மை வாக்குகளால் கட்சி மாநாடு அவருக்கு கட்டளையிட்டுள்ளது. இனி என்ன செய்வார்?

அவர் தனது கொள்கையை மாற்றிக் கொள்ளாவிட்டால் கட்சியே அவரைக் கைவிட்டுவிடும் போல் தெரிகிறது.

---

# வங்கத்தில் கம்யூனிஸ்டு சரண்-காமராஜ் தந்திரம் வெற்றி

உலகிலே நெருக்கடிகள் மிகுந்த இடம் ஒன்று உண்டென்றால் அது மேற்கு வங்காளமே.

அங்கு கம்யூனிஸ்டு உட்பட பல கட்சிகளின் கூட்டணி அரசாங்கம் நடைபெறுகிறது. அக்கூட்டணியிலும் இரு அணிகள் தனித்தனியாக இயங்குகின்றன. ஒன்று முதல்வர் முகர்ஜி தலைமையில் — மற்றது சீனசார்பு கம்யூனிஸ்டு தலைமையில்.

சீனச்சார்பு கம்யூனிஸ்டுகள் விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு எதிராகக் கலகங்களைத் தூண்டிவிட்டு கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டனர்.

கூட்டரசாங்கத்தை நடத்த முடியாத அளவுக்கு நெருக்கடிகளை அவர்கள் வளர்த்து விட்டனர். முதன் மந்திரி முகர்ஜி திணறினார்.

### காமராஜர் உபாயம்

சந்தர்ப்பம் பார்த்து காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் தனது இராஜதந்திரத்தைப்பிரயோகித்தார். அது இரு அம்சங்கள் கொண்டது.

(1) முகர்ஜியை விலகச் செய்து காங்கிரஸ் ஆதரவு கொண்ட அரசாங்கத்தை நிறுவுதல்.

(2) அது சாத்தியமில்லையேல் கம்யூனிஸ்டுகளின் கொட்டத்தை அடக்கி வங்க மாநிலத்திலே அமைதியை ஏற்படுத்தல்.

**இரண்டாவது அம்சத்தில் காமராஜ் இப்பொழுது ஓரளவு வெற்றி பெற்றுள்ளார்.**

தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடையவும், நாட்டின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்களைச் செய்த காங்கிரஸ் தலைவர்கள் வெளியேறி தனிஸ்தாபனம் அமைக்கவும் காரணகர்த்தாக இருந்தவர் அதுல்யகோஷ் என்னும் பிரபல வங்காளக் காங்கிரஸ் தலைவர். இவர் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர். முன்பு டில்லியில் அரசாங்கத்தை ஆட்டிவைத்த 'சின்டிகேட்' என்னும் குழுவில் முக்கிய உறுப்பினர். (இக்குழு அமெரிக்காவின் முழு ஆதரவையும் பெற்றிருந்தது)

### நந்தாவின் திட்டம்

வங்கத்தில் அதுல்யகோஷின் தலைமையை வீழ்த்தவும், முதன் மந்திரியுடன் சமரசபாதை அமைக்கவும் காங்கிரஸின் இடது சாரி தலைவரெனக் கருதப்படும் நந்தாவைத் திரு. காமராஜ் அனுப்பி வைத்தார்.

நந்தா திட்டத்தைச் சரியாக நிறைவேற்றினார்.

அதுல்ய கோஷின் ஆதிக்கம் பெற்ற காங்கிரஸ் மாநிலக் குழுவைக்கலைத்து விட்டு, அட்ஹாக் குழுவை (தற்காலிக அமைப்புக் குழுவை) நிறுவுவதற்கு நந்தா நடவடிக்கை எடுத்தார்.

அதுல்யகோஷைக் கவிழ்ப்பதற்காகத் திருமதி இந்திராவும், காமராஜரும் நந்தாவின் திட்டத்திற்கு ஆசி கூறினார்கள்.

ஆகவே வங்காளக் காங்கிரஸிற் பிளவு நீங்கி, வெளியேறிய தலைவர்கள் மீண்டும் காங்கிரஸ் முகாமுக்கு திரும்புவார்கள் என்ற நிலை ஏற்பட்டது. கூட்டணி அரசாங்கம் கவிழ்ந்து காங்கிரஸ் ஆதரவு பெற்ற அரசாங்கம் தோன்றும் நிலையும் உருவாகியது.

### ஒரு தந்திரம்

காங்கிரஸால் கூட்டணி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது என்ற கெட்ட பெயர் ஏற்படக் கூடாது என்று காமராஜ் திடீரென்று டில்லியில் கூறினார். ஆனால் அட்ஹாக் குழு நியமிப்பதை காமராஜ் தாமதப் படுத்தினார். காரியக்கமிட்டியின் ஆலோசனைக்கு அதனைச் சமர்ப்பிப்பதாகக் கூறிவைத்தார்.

இத்தாமதம் வேண்டுமென்றே செய்யப்பட்டதாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இத்தாமதத்தைக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொண்டு முதன்மந்திரி முகர்ஜியிடம் சரணடைந்தனர். தாங்கள் இனி மேல் எத்தகைய கலவரங்களையும் தூண்டப்போவதில்லையென்றும், நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்வதாகவும் முதல்வர் ராஜிநாமா செய்ய வேண்டாமென்றும் முதல்வருக்கு அவர்கள் வாக்குறுதி அளித்தனர்.

### நல்லபிள்ளையாக மூன்று மாதங்கள்

அட்—ஹாக்கமிட்டி அமைக்காததால், அதுல்ய கோஷின் கையே காங்கிரஸில் மேலோங்கி இருக்குமென்று கருதிய முதன் மந்திரியும் கம்யூனிஸ்டுகளுக்கு மற்றொரு வாய்ப்பு அளித்துள்ளார். இந்த வாய்ப்பு 3 மாதங்கள் தான் நீடிக்குமாம். அதற்குள் தாங்கள் நல்ல பிள்ளைகள் என்பதைக் கம்யூனிஸ்டுகள் செயல் மூலம் நிரூபிக்க வேண்டுமாம்.

இவ்வாறு வங்கத்தில் அமைதி ஏற்பட காமராஜரின் இராஜதந்திரம் உதவியுள்ளது. மீண்டும் சீனச் சார்புக் கம்யூனிஸ்டுகள் வாலாட்டத் தொடங்கினால் வங்கத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட வழி பிறக்குமென்று புதுடில்லி காங்கிரஸ் வட்டாரங்கள் கூறின. அதே சமயத்தில் அட்—ஹாக் குழுவை நிறுவி பிரிந்தவர்களைச் சேர்த்துவைக்க திரு. காமராஜ் முயற்சி செய்து கொண்டிருக்கிறாராம்.

ஆனால் எஸ். கே. பட்டீலும், மொரார்ஜிதேசாயும் அதுல்ய கோஷுக்கு ஆதரவளிப்பதால் நந்தா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காமராஜ் கடுமையாக உழைக்கவேண்டிய தேற்படலாம் என்று கூறப்படுகிறது.

வெளியேறிய காங்கிரஸ்காரர்களை மீண்டும் கட்சிக்குள் இழுப்பதற்காக மாநிலக்குழுக்களை கலைத்துவிட்டு அட்-ஹாக் குழுக்களை நிறுவும் திட்டத்தை [illegible] என்றும் தெரிகிறது.

---

## புதிய திட்டம்

தீவுப்பகுதிக் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழரசுக்கட்சி ஒருபுதிய திட்டம் ஒன்றைத் தீட்டி வருவதாக அறியப்படுகிறது.

தீவுப்பகுதி குடிதண்ணீர்ப் பிரச்சினையை ஒரு பொதுப் பிரச்சினையாக்கி கட்சி அடிப்படையில் அதற்கு தீர்வு காண தமிழரசு எம். பிக்கள் முயற்சி செய்ய வேண்டுமென அண்மையில யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழரசு வாலிப முன்னணிச் செயற்குழுக் கூட்டத்தில் ஆலோசனை கூறப்பட்டதாக தெரிகிறது. இதையடுத்து இப்பிரச்சினையை கட்சி அடிப்படையில் கவனித்து, தீர்வு காண்பதற்கேற்ற திட்டமொன்றை தமிழரசு எம். பிகள் தயாரித்து வருகிறார்கள் என்று அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாக அவர்கள் தற்போது உள்ளூராட்சி அமைச்சருடன் ஆராய்ந்து வருவதாக தெரிகிறது.

---

## இராசதுரைக்கு வரவேற்பு

எதிர்வரும் 17-10-67 இல் தமிழரசு வாலிப முன்னணித் தலைவரும் மட்டக்களப்பு மாநகர முதல்வருமான திரு. செ. இராசதுரை அவர்களுக்கு வாலிப முன்னணியின் சார்பில் யாழ் நகர மண்டபத்தில் வரவேற்பு ஒன்று அளிக்க தமிழரசு வாலிப முன்னணி ஏற்பாடு செய்து வருகிறது.

வரவேற்பு நிகழ்ச்சியையொட்டி நடைபெறும் கைசகின் ஊர்வலம் பி. ப. 4 மணிக்கு உரும்பராய்ச் சந்தியிலிருந்து ஆரம்பமாகின்றது. இவ்வூர்வலத்தைச் சிறப்பிக்கவும் ஆரம்பித்து வைக்கவும் உரும்பராய்த்தமிழரசுக்கிளைத் தலைவர் திரு. வ. நடேசலிங்கம், ஜே.பி. உரும்பராய்த் தமிழரசு வாலிப முன்னணிக் கிளைச் செயலாளர் திரு. ந. அரியரத்தினம் ஆகியோர் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர்.

---

## தோல்வி மேல் தோல்வி

ஐ நா. வுக்கு மீண்டும் தோல்விதான் கிடைக்குமாம்.

வியட்நாம் யுத்தத்தை நிறுத்தவோ வியட் நாம் பிரச்சினையைத் தீர்க்கவோ ஐ நா. வால் முடியவில்லை. இவ்விடயத்தில் அமெரிக்கா ஐ நா. குரலுக்குச் செவிசாய்க்கவில்லை.

மத்திய கிழக்கிலும் இதே நிலை தான். அரபு - இஸ்ரேல் தகராறைத் தீர்த்து வைப்பதற்கான பலம் ஐ. நா. விடம் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்காக முன்பு ஒரு பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டியும் பயன் ஏற்படவில்லை. இம்முறை ஐ. நா பொதுச் சபையாலும் ஒன்றும் நடைபெறப் போவதில்லை என்று அவதானிகள் கூறுகின்றனர். ஐ. நா. வுக்குத் தோல்வி மேல் தோல்

---

## கிளர்ச்சி வெற்றி

"ஈழத்தில் தமிழ் நூல்களின் பிரசுரத்தையும் விற்பனையையும் ஊக்குவிக்குமுகமாக, இந்நியாவில் பிரசுரிக்கப்பட்ட நூல்களை இவ்வாண்டு சாகித்திய மண்டலம் தன் பரிசுத் திட்டத்திலிருந்து நிராகரித்தமையைப் பாராட்டுகின்றோம். எமது எழுத்தாளர் சென்ற சில ஆண்டுகளாக நடத்திவந்த கிளர்ச்சிக்கு இது வெற்றியாக அமைந்துள்ளது" என்று கொழும்பு இலக்கிய வட்டம் சாகித்திய மண்டலத்திற்கும், கல்வி கலாசார அமைச்சிற்கும் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் முறையிலேயே செயற்படும் சாகித்திய மண்டல உறுப்பினர்களுக்கு எதிராக வெகுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவும் கொழும்பு இலக்கியவட்டம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இரத்த சோகை' ஏன் ஏற்படுகிறது?

'இரத்த சோகை வியாதி வரும் வாய்ப்பு ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகமாக உள்ளது ஏனென்றால் பிரசவம், கருச் சிதைவு போன்ற காலங்களில் பெண்கள் அதிகமான ரத்தத்தை இழந்து விடுகிறார்கள்.

ரத்தக் குறைவைத்தான் ரத்த சோகை (அனீமியா) என்று அழைக்கிறோம். உடல் வெளுத்துப் போதல், மேல் தோல் மிருதுவாகிப் போதல், நாக்கிலே புண், ஜீரணக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான கோளாறுகள், (நரம்புத் தளர்ச்சி போன்றவை) பலவீனம், கைகால்களில் குத்துவது போன்ற உணர்ச்சி, கைகால்கள் மரத்துப் போதல் போன்ற அறிகுறிகள் ரத்த சோகை நோயை முன்னறிவிக்கின்றன.

உடலில் இரும்புச் சத்து குறைந்து போனாலோ, அதிகமாக ரத்தம் இழந்து அணுக்கள் போதுமான அளவு உடம்பில் தயாராகாமல் இருந்தாலோ ரத்த சோகை நோய் ஏற்படலாம்.

உணவில் குறைபாட்டின் காரணமாக ரத்தசோகை ஏற்படுவது சாதாரணமாய் நடக்கிறது. உடலின் தேவைக்கேற்ற அளவு இரும்பு சத்து நம் உணவில் கலந்திரா விட்டால் ரத்த அணுக்கள் போதுமான அளவு உற்பத்தியாவதில்லை. கர்ப்பிணிப் பெண்களுக்கு அந்நிலை எளிதில் ஏற்பட முடியும். கர்ப்பிணிகளின் உடலுக்கு இரும்புச் சத்து அதிகமாகத் தேவைப்படுகிறது. உணவு, தேவையான அளவு இரும்பு சத்துப் பொருள்களைக் கொண்டிராமல் அவர்களை ரத்த சோகை நோயாளிகளாக்கி விடுகிறது.

சில நோய்களினால் ஏற்படும் ரத்த ஒழுக்குகளும் ரத்த சோகையைத் தோற்றுவிக்கலாம். வயிற்றுப் புண், வயிற்றுக் கடுப்பு, மூலநோய், மலேரியா காய்ச்சல், புற்றுநோய், மலச்சிக்கல் போன்ற நோய்களிலும், பெண்களின் கருச்சிதைவு, பிரசவம் ஆகியவற்றிலேயும் மிகுதியான ரத்தம் சேதமடைய வாய்ப்புண்டு.

இழந்த இரத்தத்தைத் திரும்பப் பெற, தகுந்த உணவுகளையும் மருந்துகளையும் நாடுதல் வேண்டும். சில சமயங்களில் ரத்தத்தை உடலில் செலுத்துவதும் தேவைப்படலாம். இவைகளின் மூலம் ரத்த சோகை ஏற்படாமல் தடுக்கலாம்.

'லிவர் எக்ஸ்ராக்ட்' என்ற சத்து மருந்து இந்நோய்க்கு மிகவும் உபயோகமான ஒன்றாகும்.

கல்லீரல் கோளாறின் காரணமாக இளமையில் தலை நரைத்துப் போயிருப்பவர்களுக்கு இந்நோய் நாற்பது வயதுக்கு மேல் தோன்ற வாய்ப்பு இருக்கிறது.

இரத்தம் உடலின் அடிப்படையான அத்தியாவசியமான திரவம். அது தேவைக்குக் குறைவாக இருந்தால் நிச்சயம் உடலுக்குத் தீமை. ரத்த சோகை ஒருவரைப் பலநோய்களுக்கு ஆளாக்கலாம்.

ஆகவே ரத்தம் குறைந்து போனால் உடனுக்குடன் கவனிப்பது நலம்.

# காய்கறிகள் வாங்கும் போது கவனிக்கவேண்டியவை

### பீட்ரூட்

பீட்ரூட்களை மிகப் பெரிய தான அளவில் வாங்கக் கூடாது. சிறிய அளவில் இருக்கும் பீட்ரூட்டில் நிறைய சத்தும் ருசியும் அடங்கியிருக்கும். பீட்ரூட்டை தினசரி உணவில் சேர்த்தால் உடலில் ரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

### கரட்

இலைகளுடன் சேர்த்து கொத்தாகக் கட்டியிருக்கும் புதிய கரட்களையே வாங்க வேண்டும். கரட் நல்ல வடிவத்துடனும் பளபளப்பான நிறத்துடனும் இருக்க வேண்டும். முற்றிய கரட்கள் மரம் போன்று விளைந்து கொடுக்காத நல்லமையுடன் சமைக்க உபயோகமற்றதாகும்.

### உருளைக்கிழங்கு

உருளைக்கிழங்கின் மேல் தோலை லேசாகச் சீவியவுடன் கெட்டியாகவும் பளபளப்பாகவும், பளிச்சென்றும் இருக்க வேண்டும். புத்தம் புதிய பெரிய உருளைக் கிழங்குகளை மெல்லிய வட்டங்களாகச் சீவி நெய்யிலோ, அல்லது எண்ணெயிலோ வறுத்தெடுத்துச் சாப்பிட்டால் சாகரவென்று நல்ல ருசியாக இருக்கும்.

### முட்டைக்கோவா

இதன் மேல் புறம் கனமான பச்சையிலையுடன் ஒன்றோடொன்று நெருக்கமான இலைகளுடைய பசைப் பசேலென்ற நிறத்துடன் இருக்கும் கோவா தான் மிகச்சிறந்தது.

### வெள்ளரிக்காய்

பச்சைப்பசேலென்ற இளசான வெள்ளரிப் பிஞ்சுகள் பச்சையாகச் சாப்பிடுவதற்கு மிகவும் நல்லது. இதைச்சமையலுக்கும் எடுக்கலாம். விலை மிககுறைவு. வெயிற்காலங்களில் தாகம் தீர்க்கும். முக்கியமாகச் சலக்கடுப்பு முதலிய நோய்களைக் குணமாக்கும்.

### தக்காளிப்பழம்

இரத்தம் போல் செக்கச் செவேல் என்று இருக்கும் பழம் மிகமிக நல்லது. ருசியும் கூட. நடுத்தர அளவுள்ள பழம் சிறந்தது. சீரான உருவத்துடனும் செட்டியாகவும் ரத்தச் சிவப்புடன் கூடிய பழங்களில் விட்டமின் நிறைய உண்டு.

---

## இலங்கை நிபுணர்களுக்குப் பயிற்சி

இலங்கை, பர்மா, இந்தியா உட்பட 24 நாடுகளிலிருந்து இங்கு வந்துள்ள பொருளாதார நிபுணர்கள் பெர்லினில் பொருளாதாரத் திட்ட அமைப்பு பற்றிய ஒருவகுப்பில் படித்து வருகின்றனர். பிரபல பொருளாதாரவிற்பன்னர்கள் இந்த வகுப்பில் தங்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வாசிக்கின்றனர்.

## முக்கோணத் திருமணம்

மேற்கு ஜாவாவிலுள்ள பாண்டுங் பல்கலைக்கழகத்தில் படித்துவந்த ஒரு பெண் இந்தோனேசியாவிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குச் சென்று ஒரு டாக்டர், ஒரு கல்லூரிப் பேராசிரியர், ஒரு வர்த்தகர் ஆகிய மூவரையும் ஒரே நாளில் தனித் தனியாக ரகசியமாக மணந்து கொண்டாள். அவர்களிடமிருந்தெல்லாம் கிடைத்த அளவு பணத்தைச் சுருட்டிக் கொண்டு இந்தோனேசியாவுக்குத் திரும்பி விட்டாள்!

ஒரு நாள் கல்லூரிப் பேராசிரியரைச் சந்தித்த டாக்டர் தனது இந்தோனேசிய மனைவியைப்பற்றி வர்ணிக்கவே அந்தப் பேராசிரியருக்கு ஆத்திரம் வந்து விட்டது. 'என் மனைவியைத் திருடிய கயவனே' என்று அவர் டாக்டர் மீது பாய டாக்டரும் 'எனது மனைவியைக் களவாடிய கள்வனே' என்று பேராசிரியர் மீது பாய இருவரும் கட்டிப்பிடித்து உருண்டனர்.

இந்தத் தகராறு நடைபெற்றுக் கொண்டிருந்த போது பத்திரிகைகாரச் சிறுவன் ஒருவன் ஒரு பத்திரிகையைக் கொண்டு வந்து போட அந்தப்பத்திரிகையில் அந்த இந்தோனேசியப் பெண்ணின் கடிதம் ஒன்று பிரசுரமாகியிருப்பதைக் கண்ட பேராசிரியரும் டாக்டரும் சமாதானமாகி அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்த பின்னர் தாங்கள் இருவர் மட்டுமின்றி மற்றொரு வர்த்தகரும் நன்றாக ஏமாந்திருக்கிறோம் என்ற உண்மையைப் புரிந்து கொண்டனர்.

இந்தோனேசியப்போலீஸார் அந்தப் பெண்ணின் மீது ஒரு வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கு பாண்டுங் மாவட்ட ராணுவத் தலைமை அலுவலகத்தில் விசாரிக்கப்படும்.

# திரைவாணன் பதில்கள்

ராம் ராம்,
ஆரையம்பதி.

கே: சிவாஜிகணேசன் நடித்த 'கந்தன் கருணை, திருவிளையாடல், சரஸ்வதி சபதம், திருவருட் செல்வர்' இப் படங்களில் எந்தப் படத்தில் நடிப்புகள் சிறந்தவை என்று கூறமுடியுமா?

ப: கந்தன் கருணை தவிர்ந்த ஏனைய மூன்று படங்களிலும் நடிகர் திலகத்தின் நடிப்பு சிறந்து விளங்குகிறது.

இ. தர்மபாலன்,
நெடுங்கேணி.

கே: கொடிமுடித் திலகம் கே. பி. சுந்தரம்பாளுக்கு பத்மஸ்ரீ பட்டம் அளித்திருந்தால்......?

ப: அவருக்கு ஒரு பாராட்டு விழா நடந்திருக்கும்!

எஸ். து. ராஜா
பலாங்கொடை

கே: சிவாஜிகணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், ஜெமினி கணேசன், போன்ற முன்னணி நடிகர்களின் வெள்ளிவிழாப் படங்கள் யாவை?

ப: சிவாஜியின் வெள்ளிவிழாப்படங்கள், பாகப் பிரிவினை, பாசமலர், திருவிளையாடல், பாவமன்னிப்பு. எம் ஜி. ஆரின் வெள்ளிவிழாப் படங்கள், மதுரை வீரன், எங்கவீட்டுப்பிள்ளை. ஜெமினியின் வெள்ளிவிழாப்படங்கள்கல்யாணப்பரிசு பாசமலர், பாவமன்னிப்பு.

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: பராசக்திகணேசனுக்கும் பத்மஸ்ரீ கணேசனுக்கு முள்ள வித்தியாசமென்ன?

ப: உருவத்தில் முன்னவர் மெலிந்தவர், பின்னவர் தடித்தவர். நடிப்பில் முன்னவர் மெலிந்தவர், பின்னவர் தடித்தவர்!

கே: சிவாஜியின் 'திருவருட் செல்வர்' வெள்ளிவிழா கொண்டாடுமா?

ப: கொண்டாடாது!

எஸ். கந்தசாமி
அட்டன

கே. எம். ஜி. ஆர். இப்போது எந்தப்படத்தில் நடித்து வருகிறார்?

ப: தேவரின் 'விவசாயி' யை முடித்துக் கொடுப்பதில் மக்கள் திலகம் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். தீபாவளியன்று ரிலீஸ் ஆகிறது இப்படம்!

ஜபத்திரா
மன்னார்.

கே: பேபிசகிலா இதுவரை நடித்த படங்கள் எத்தனை?

ப: 13 தமிழ்படங்களிலும், ஒரு இந்திப் படத்திலும் நடித்து விட்டாள் இந்தப்படு சுட்டி!

எம். கதிரேசன்
மருதானை

கே: அரச கட்டளையா, தங்கையா வெற்றிப் படம்?

ப: இருபடங்களின் தயாரிப்பாளர்களுக்கும் வெற்றியில்லாவிட்டாலும் தோல்வியில்லை, அதுபோதுமே!

கே. வி. வி.
கிரான்குளம்

கே: ஜெயலலிதாவின் வயது என்ன?

ப: 30 வயது!

கே: ஜெயலலிதா இதுவரை நடித்தது எத்தனை படங்கள்? இப்போது எத்தனையில் நடிக்கிறார்?

ப: ஏறத்தாழ 30 படங்களில் நடித்து விட்டார். இப்போது 25 படங்களில் நடித்து வருகிறார்.

சி. கனகேந்திரன்
உடுப்பிட்டி

கே: சிவாஜி இதுவரையில் எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

ப: சுமார் 120 படங்களில்!

எஸ். தாசன்
சுதுமலை

கே: சிவாஜி நடித்த 'அரிச்சந்திரா' இருமலர்கள்' 'கலாட்டா கலியாணம்' படங்கள் எப்போது வெளிவரும்?

ப: அரிச்சந்திரா ஏற்கெனவே வெளிவந்து விட்டது. கலாட்டா கல்யாணமும் இருமலர்களும் விரைவில் திரையிடப்படலாம்.

வெ. பிரான்சிஸ் சேவியர்,
கருக்குப்பனை

கே: எம். ஜீ. ஆரின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: அவரது உள்ளம் போல ஒளி படைத்ததாக இருக்கும்.

கே: எம். ஜி. ஆர். நடித்த அன்பேவா, எங்க வீட்டுப் பிள்ளை நாடோடி மன்னன், ஆயிரத்தில் ஒருவன் ஆகிய படங்களில் வெற்றிப்படம் யாது?

ப: நான்குமே வெற்றிப் படங்கள் தாம். ஆனால் 'எங்க வீட்டுப் பிள்ளைக்கே' அதிக வசூல் கிடைத்தது.

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூந்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.

# 14 ஆண்டுகளில் தங்கப் பதக்கப்!

1953-ம் ஆண்டு முதல் கடந்த பதினான்கு ஆண்டுகளாகத் திரைப்படங்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்திய ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பெற்ற படங்களின் விவரமாவது:—

1953—''ஷியாமிச்சி ஆயி'' (மராத்தி)
1954—''மிர்ஸா காலிப்'' (ஹிந்தி)
1955—''பதர் பாஞ்சாலி'' (வங்காளி)
1956—''காபூலி வாலா'' (வங்காளி)
1956—''தோ ஆங்கேன் பாரா ஹாத்'' (ஹிந்தி)
1957—''ஸகர் ஸங்கேம்'' (வங்காளி)
1959—''அபுர் ஸன்ஸார்'' (வங்காளி)
1960—''அனுராதா'' (ஹிந்தி)
1961—''பாகினி நிவேதியா'' (வங்காளி)
1962—''தாதா தக்கர்'' (வங்காளி)
1963—''ஷேர் அவுர் ஸப்னு'' (ஹிந்தி)
1964—''சாருலதா'' (வங்காளி)
1965—''செம்மீன்'' (மலையாளம்)
1966—''திஸ்ரி கஸம்'' (ஹிந்தி)

கடந்த பதினான்கு ஆண்டுகளில் ஏழு ஆண்டுகள் வங்கப் படங்களுக்கும், ஐந்து ஆண்டுகள் ஹிந்திப் படங்களுக்கும், ஒரு ஆண்டு மலையாளப் படத்திற்கும் ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லதா மங்கேஷ்கரின் ரசிகை நான்! சுசீலா சொல்கிறார்

இன்றைய தமிழ் திரையுலகின் பின்னணிப் பாடகிகளில் முன்னணியில் நிற்பவர் பி. சுசிலா. தன் மயக்கும் குரலிசையால், பல கோடி உள்ளங்களை கவர்ந்தவர் திருமதி சுசிலா. அவர் அளித்த சுவையான பதில்கள் இங்கு இடம்பெறுகின்றன.

கே: நீங்கள் எங்கே பிறந்தீர்கள்? இசைத்துறையில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

ப: நான் விஜயநகரத்தைச் சேர்ந்தவள். என் தாய்மொழி தெலுங்கு. என் பள்ளிப் படிப்பெல்லாம் எட்டாம் வகுப்புடன் நின்றுவிட்டது. பள்ளியில் படிக்கும்போது பாட்டு என்றால் எனக்கு உயிர். பாட்டுப் போட்டிகளில் எல்லாம் கலந்துகொண்டு முதற் பரிசை தட்டிக்கொண்டு விடுவேன்! விஜயநகரத்தில் எந்த இடத்தில் பாட்டுப்போட்டி நடந்தாலும் முதல் பரிசு என் கைக்குத்தான் வந்து சேரும்;

கே: உங்கள் சங்கீத ஆர்வத்தை வளர்த்தவர்கள் யார்?

ப: என் பெற்றோரே. எனக்கு சங்கீதத்தில் இருந்த ஆர்வத்தையும், குரலினிமையையும் கண்ட என் பெற்றோர்கள் விஜயநகரத்தில் உள்ள கர்நாடக சங்கீதப் பள்ளியில் என்னைச் சேர்த்தார்கள். அங்கு கர்நாடக சங்கீதம் பயின்று டிப்ளோமா பட்டமும் பெற்றுவிட்டேன்.

கே: சினிமாவில் பின்னணி பாட எப்படி நுழைந்தீர்கள்? அதற்கு முதன் முதல் உதவியவர் யார்?

ப: சினிமா பின்னணிப் பாடகியாக நான் வந்ததே ஒரு குட்டிக்கதை. நான் அப்போது வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளில் அடிக்கடி பாடி வந்தேன். ஒரு நாள் வானொலி நிலையத்தினர் இசையமைப்பாளர் பெண்டியாலாவிடம் என்னையும் இன்னும் நான்கு பேரையும் சினிமாவில் பின்னணி பாடுவதற்கு 'வாய்ஸ் டெஸ்ட்' வைக்க அனுப்பினார்கள். எங்கள் ஐந்து பேருக்கும் பெண்டியாலா 'வாய்ஸ் டெஸ்ட்' வைத்தார். முடிவில் பின்னணி பாடுவதற்கு என்னையே தேர்ந்தெடுத்தார். அவர் இசையமைத்து வந்த 'கன்னதல்லி' என்ற படத்தில பின்னணிபாட சந்தர்ப்பமும் கொடுத்தார்.

கே: நீங்கள் பாடிய முதற் பாடல் எது?

ப: 'ஏன் அழைத்தாய்? என்னை ஏன் அழைத்தாய்?'

கே: நீங்கள் இதுவரை எத்தனை படங்களில் பின்னணி பாடியிருக்கிறீர்கள்?

ப: அது எனக்கே தெரியாது. ஆனால் சமீபத்தில் எனக்கு ஒரு ரசிகை கடிதம் எழுதியிருந்தார். அதில் நான் 78 படங்களுக்குமேல் பாடியிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

கே: நீங்கள் வட இந்திய இசையமைப்பாளர்கள் இசையமைத்த படங்களில் பாடியிருக்கிறீர்களா?

ப: நௌஷத், இ. ராமச்சந்திரா, ஹேமந்த குமார் ஆகியோர் இசையமைத்துள்ள படங்களில் பாடியிருக்கிறேன்.

கே: நீங்கள் பாடிய பாட்டுக்களை வானொலியில் கேட்கும் போது என்ன நினைப்பீர்கள்?

ப: 'அதில் என்ன தப்பு செய்திருக்கிறேன்' என்பதையே கவனிப்பேன். சில பாடல்களில் இம்மாதிரி நான் செய்த தவறுகள் தெரியும்போது எனக்கே கொஞ்சம் வெட்கமாக இருக்கும்.

கே: மன்னிக்கவும். உங்களுக்கு பிடித்தமான பின்னணிப் பாடகி யாராவது இருக்கிறார்களா?

ப: நான் இந்திப் படஇ லதா மங்கேஷ்கரின் விசிறிதானே! சதா அவர் பாட்டைக் கேட்பதில எனக்கு தனி யானந்தம். லதாவைப் பற்றி யாராவது எதாவது சொன்னால் என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியாது.

கே: லதா மங்கேஷ்கருடன் நீங்கள் நெருங்கிப் பழகியபோது ஏதாவது மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் நடந்ததுண்டா?

ப: நான் பம்பாயில் நடந்த கலை நிகழ்ச்சியொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். அப்போது லதா வீட்டுக்கும் சென்றிருந்தேன். அப்போது லதா 'உங்கள் பாட்டு என்னை மெய்மறக்கச் செய்கிறது. நீங்கள் பாடிய பல பாடல்களின் இசைத்தட்டுக்களை நான் வைத்திருக்கிறேன்' என்று கூறியபோது நான் அடைந்த மகிழ்ச்சியை என்றும் மறக்க முடியாது.

கே: நீங்கள் இப்போதெல்லாம் கச்சேரிக்கு செல்வதில்லையே, ஏன்?

ப: இப்போதெல்லாம் அதற்கு நேரம் இருப்பதில்லை. அதுவேதான் காரணம்!

கே: நீங்கள் யாருடைய கச்சேரிக்கு தவறாமல் செல்வீர்கள்?

ப: பொதுவாக நல்ல கச்சேரிகள் எதையும் நான் தவறவிடமாட்டேன். குறிப்பாக திருமதி எம். எஸ், ரவி சங்கர்—சிதார், படேகுலாம் அலிகான்பாட்டு, பிஸ்மில்லாகான்—ஷெனாய் கச்சேரிகள் என்றால் தவறவிடமாட்டேன்.



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் மறக்க முடியாத படைப்புக்களில் ஒன்றான 'சின்னஞ் சிறு உலகம்' படத்தில் ஜெமினி, விஜயா. இப்படம் இப்பொழுது முதல் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடப்பட்டிருக்கிறது.



'குழந்தையும் தெய்வமும்' படத்தில் அபாரமாக நடித்திருக்கிறார் நாகேஷ்.

# சாவித்திரி சந்திக்க விரும்பும் ஹாலிவூட் நடிகை



நமது நடிகையர் திலகம் சாவித்திரி ஒரு அமெரிக்க நடிகையை சந்திக்கவிரும்புகிறார். அவர் யாரென்பது தெரியுமா? ஆசன் ஹோவார்ட் தான் அந்த ஹொலிவூட் நடிகை. இந்த நடிகையை ஏன் சந்திக்க விரும்புகிறார் சாவித்திரி? அவரே கூறுகிறார், படியுங்கள்.

'நான் படவுலகில் அடிபட்ட காலத்திலிருந்தே அவர் நடித்த படங்களை ஒன்று விடாமல் பார்த்து வருகிறேன்! ஒவ்வொரு படத்திலும் முந்திய படத்தை விட இதில் சிறப்பாக நடித்திருக்கிறாரே என்று சொல்லும்படியாக அவரது நடிப்பு இருக்காது. இந்தப் பாத்திரத்தை இதைவிட சிறப்பாக யாரும் நடிக்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு சிறப்பாக நடித்திருப்பார் ஆசன்.

'ஆசனின் படங்கள் எங்கு திரையிடப்பட்டாலும் நான் உடனே போய்ப் பார்ப்பேன்' மேல் நாட்டு நடிகைகளிலேயே தனது நடிப்புத் திறமையால் என்னைக் கவர்ந்தவர் அவர். அதனால் தான் அந்த திறமைசாலியை நான் சந்திக்க துடிக்கிறேன். நான் அவரை ஒரேயொரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அது இது தான்: நானும் நீங்களும சேர்ந்து ஒரு நடிப்புப் பள்ளியை ஆரம்பித்து நடத்தினால் என்ன?'



திரைவிமர்சனம்

# தெய்வச் செயல்

தேவரின் படங்கள் என்றாலே அதில் விலங்குகளுக்கு குறைவிருக்காது என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தது. இடையில் சிறிது காலம் அவரது படங்களில் விலங்குகளைக் காணவில்லை. ஆனாலும் விலங்குகளை தாம் மறக்கவில்லை என்பதை நிரூபிக்கும் முறையில் மிருகங்களை வைத்தே ஒரு படத்தை தேவர் தயாரித்தார். தேவரின் அச்செயல் தான் சிலோன் எண்டடெயின்மென்ஸ் திரைகளில் இப்பொழுது காட்சி தரும் தெய்வச் செயல்.

கொடிய மிருகங்கள் கூட அன்புடன் வளர்க்கப்பட்டால் நன்றியுணர்ச்சியுடன் இருக்கும் என்று இந்தப் படத்தின் மூலம் கூறுகிறார் தேவர். அது உண்மையோ என்னவோ இந்தப் படத்தில் வரும் மிருகங்கள் தேவரை கைவிட்டு விடவில்லை என்பது மட்டும் உண்மை.

நாலுயானைக் குட்டிகளுக்கும் முத்துராமனுக்கும் தந்தையாக வருகிறார் சுந்தரராஜன். மிருகங்களின் நல்வாழ்வுக்காக தன் நலன்களையே தியாகஞ்செய்கிறார். நீரானை சிங்கம், புலி, கரடியாவற்றுடனும். நெருங்கிப் பழகுகிறார். சில இடங்களில சிங்கம் போலவே கர்ச்சிக்கிறார்.

முத்துராமன் பாரதியை காதலிக்கிறார். ஆதித்தனுடன் சண்டை போடுகிறார்.

பாடல்கள் ஒன்று கூட மனதில் பதியவில்லை. படம் முடிந்து திரும்பும் போது நான் குயானைக்குட்டிகளும் தம் மனத்தில் நிற்கின்றன.

# படுக்கைக்கு ஆசைப்பட்டு திருமணம் செய்த நடிகர்

நடிகர் திலிப்குமார் இவ்வளவு காலமாக பிரம்மச்சாரியாக இருந்துவிட்டு இப்போது திடீரென்று திருமணம் செய்து கொண்டது ஏன்? என்பது பற்றிய ஒரு சுவையான தகவல் வெளியாகியுள்ளது இது பற்றிய விவரமாவது:

விஜயா இண்டர் நேஷனலின் 'ராம் அவுர் ஷியாம் (ஹிந்தி எங்க வீட்டுப் பிள்ளை) படத்திற்காக முதலிரவுப் படுக்கையறைக் காட்சியொன்று படமாக்கப்பட்டது. அந்தக் காட்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட படுக்கையைக் கண்டு ஆசைப்பட்ட திலிப் குமார் அந்தப் படுக்கையைத் தனக்குக் கொடுக்குமாறு நாகி [illegible] டார். அந்தப் படுக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே திட்டமிட்டிருந்த நாகிரெட்டியின் மகனும் அப்போது அருகிலிருந்தார்.

எனவே திலிப் குமாருக்கு அந்தப் படுக்கையைக் கொடுக்காமல் தட்டிக்கழிக்க ஒரு அருமையான வழியைக் கண்டு பிடித்துவிட்ட நாகிரெட்டியின் மகன் உடனே இடைமறித்து திலிப் குமாரைப் பார்த்து 'உங்களுக்கு இந்தப் படுக்கை வேண்டுமானால் தாராளமாக எடுத்துச் செல்லலாம். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை! இந்தப் படுக்கையை எடுத்துச் செல்வதற்கு முன்பு நீங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும்' என்று ஒரு போடுபோட்டார்.

இதைக் கேட்ட திலிப் குமார் அப்படியே அயர்ந்து போய் விட்டார். என்றாலும் சில நாட்களிலேயே தனது மனதைத் திடப் படுத்தி நடிகை சயிரா பானுவைத் திருமணம் செய்து கொண்டார். எனவே 'ராம் அவர் ஷியாம்'படத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அந்தப் படுக்கையை திலிப் குமாருக்குக் கொடுப்பதை தவிர இனிவேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்ட நாகிரெட்டியின் மகன், திலிப் குமார் தம்பதிகளுக்கு ஒரு விருந்து வைத்து அந்தப் படுக்கையையும் பரிசாகக் கொடுத்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைக்கோடு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மறந்தது இருவரும் ஒருவரையொருவர் இமைக்காமல் பார்த்தபோது அவர்கள் உதடுகள் ஒன்று சேரத் துடித்தன.

தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத சிவகாமி பார்த்திபனின் பார்பில் சரண்புகுந்தாள். அடுத்த சில நிமிட நேரம் என்ன நேர்ந்தது என்று இருவருக்குமே தெரியாது.

சிலமணி நேரமயக்கத்தின் பின் கலைந்த தலைகளைச் சீர் செய்து கொண்டு மீண்டும் அடுத்த கிழமை இதே இடத்தில் சந்திப்பதானவுறுதியுடன் இருவரும் இருவேறு திசைகளிற் சென்றனர். அன்று சிவகாமிக்கு சொர்க்கத்தின் நிழலில் நிற்பது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டது. பெற முடியாத எதையோ பெற்று விட்ட திருப்தியில் அவள் வீட்டை அடைந்தாள்.

அடுத்த வாரம் மீண்டும் அதே இடத்தில் இருவரும் சந்தித்தனர். இம்முறை அவர்களிடையே பிணைப்பு மிகவும் நெருக்கமாக இருந்தது. கால இடைவெளி குறுகியதாக இருந்ததால் எந்த வித தயக்கத்திற்கும் இடமிருக்கவில்லை.

இம்முறை தனிக்குடித்தனம் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்படி சிவகாமி பார்த்திபனை மிகவும் உருக்கமாக வேண்டினாள். இன்னும் சில தினங்களில் அவளைப் பகிரங்கமாக அழைத்துப் போவதாக அவன் உறுதியளித்ததும் அவள் அவன் அன்புப் பிடிக்குள் சிக்கிக் கொண்டாள்.

இப்படியே பல சந்திப்புகள் நிகழ்ந்தன; இரண்டு மாதங்களின் பின் சிவகாமி தான் தாய்மை அடைந்திருப்பதை அவனிடம் கூறி உடனடியாக அவளை அழைத்துப் போகும்படி வேண்டிகோள் விடுத்தபோது பார்த்திபன் சிறிது அதிர்ச்சி அடைவே செய்தான். ஆயினும் அதை வெளிக்காட்டாமல் அடுத்தமுறை சந்திக்கும் போது அதற்கான ஆயத்தங்களுடன் வருவதாகக் கூறி அன்றைய பொழுதை மிகவும் இன்பமாக கழித்து விட்டு சிவகாமியிடம் இருந்து விடை பெற்றான்.

அவன் போவதையே இமை கொட்டாமற் பார்த்து நின்ற சிவகாமிக்கு பாவம், அது தான் அவனது கடைசிச் சந்திப்பு என்பது தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.

அடுத்த வாரம் அவள் ஒரு நாளும் இல்லாத குதூகலத்துடன் குறிப்பிட்ட இடத்தை அடைந்த போது அவள் அதிர்ச்சியடைந்தாள். வழிமேல் விழி வைத்துப் பார்த்து நின்றும் பார்த்திபனை அன்று வெளியே காணவில்லை. அறையில் ஒழித்திருந்து தன்னை ஏமாற்றப்பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு ஒட்டலுக்குள் அடியெடுத்து வைத்தபோது அறைக் கதவு பூட்டுப் போட்டு மூடப்பட்டிருந்தது.

அவளுக்கு இப்போது எல்லாமே விளங்கி விட்டது. அவள் தன் அடிவயிற்றை பிடித்தபடி தெருவில் இறங்கி நடந்தாள்.

திருமணமாகிக் குடும்பம் ஆரம்பித்த சில மாதங்களில் ஒரு குழந்தைக்காக அவள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. ஏறி இறங்காத கோயில்களும் இல்லை. ஆனால் இன்று அவள் வேண்டாத போது அவள் வயிற்றிலே குழந்தை... அவள் இனி எந்த முகத்துடன் அவள் அக்கா முகத்தில் விழிக்க முடியும்...?

இன்று தெரியாவிட்டாலும் நாளை எப்படியோ அவளுக்குத் தன் நிலைமை புரியத்தான் போகிறது. அப்போது அவள் கேட்டால்! இவள் என்னபதில் கூறமுடியும்...? அவளுக்கு ஒன்றுமே புரியாத நிலையில் அவள் தன் வீட்டை அடைந்தாள். அன்று முதல் அவள் ஒரு நடைப் பிணமானாள்.

கோமதி தனது கணவன் தான் இத்தகைய குற்றத்தை செய்திருக்க வேண்டும் என்று நினைத்து அவனைக் கடிந்த போதெல்லாம் சிவகாமி உண்மையைக் கூறியிருக்கலாம். கூறத்தான் நினைத்தாள். ஆனால் கணவனைச் சுயவஞ்சக அவள் விரும்பவில்லை. அதனால் நடப்பது நடக்கட்டும் என்று மௌனம் சாதித்தாள். ஆயினும் ஒரு பூகம்பத்தை அவள் அந்த வேளையிலும் எதிர் பார்த்தே இருந்தாள். அவள் எதிர்பார்த்த பூகம்பமும் வெடித்து முடிந்து விட்டது. ஆனால் அதில் அவளுக்கு ஏற்பட்ட காயத்தின் வேதனையைத்தான் அவளால் பொறுக்கமுடியவில்லை.

வாழ்க்கையில் எதற்கும் ஒரு எல்லையுண்டு என்பது அவளுக்குத் தெரியும் இப்போது அவளும் அந்த எல்லைக்கோட்டுக்கே வந்து விட்டாள். சிந்திப்பதற்கு முடியாத ஒரு தீர்க்கமான முடிவுக்கு அவள் வந்து விட்டாள். அதை இனிக்கடவுளே வந்தாலும் தடுக்க முடியாத அளவுக்குத் துணிவு பெற்று விட்டாள்.

அடுத்த நாட்காலை கந்தசாமியும் கோமதியும் முதலிரவு நடந்த எதிரொலியின் காரணமாகச் சற்று நீண்ட நேரம் தூங்கி விழித்தவர்களாய்த் திடுக்கிட்டு மாடிப் படியை நோக்கி மேலே சென்ற போது சிவகாமி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். அவள் மார்பின் மேல் 'அக்காவுக்கு' என்று முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்று விரித்தபடி கிடந்தது. அதை அவசரமாக எடுத்துப் படித்த கந்தசாமி கடிதத்தைக் கோமதியிடம் நீட்டிய போது 'சிவகாமி...'! என்று அவள் அலறிய சத்தம் அந்த மாமலையையே உடைக்கக்கூடிய சக்தி பெற்றிருந்தது.

அக்கா!

என்னை மன்னித்து விடு! உன் கணவராகிய என் அத்தான் நிரபராதி. நான் யாருக்கு உரிமையானவளோ அவருக்கு நான் குற்றவாளியல்ல என்பது புலப்படும். ஆயினும் நான் தற்கொலை செய்யத் துணிந்து விட்டேன். தற்கொலை செய்வது கோழைத்தனம் என்கிறீர்களா அக்கா... ஆம் அது கோழைத்தனம் என்பது எனக்கும் தெரியும். ஆனால்... ஆமாம்... ஆனால் கட்டிய கணவனை உயிருடன் பலி கொடுத்து விட்டு என் உணர்ச்சிகளை எல்லாம் அடக்கி வாய் பேச முடியாதவளாய் வாழ்[illegible]

அக்கா, ஆகவே என்னை மன்னித்து இதுவரை எனக்குச் செய்த கடமைகளுடன் ஒன்று கக்கருதி என் இறுதிச்சடங்கையும் முடித்து விடு. அத்தான் மிகவும் நல்லவர். அப்படியான கணவரைப்பெற்ற நீ அதிர்ஷ்டசாலி... பாக்கியசாலியுங்கூட நீயாவது சந்தோஷமாக வாழ் அக்கா......!

சிவகமி

தங்கச்சி... சிவகாமி... பைத்தியம் பிடித்தவள் போல் கத்திக் கொண்டு கீழே விழப் போன கோமதியை தாங்கிப் பிடித்த கந்தசாமியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர் வழிந்தோடியது!

# விழிப்புணர்ச்சி வேண்டும்

'அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரத்தை இயக்குபவர்கள் அரசாங்கத்திலும், கூட்டுத்தாபனங்களிலும் பணியாற்றும் ஊழியர்களேயாவர். சிங்கள, தமிழ் மொழிச் சட்டங்களை அரசு நடத்தும் பொறுப்பும் இவர்களது தாங்களிலேயே இருக்கின்றன. சிங்கள ஊழியர்கள் சிங்களத்தை நிர்வாக அரசு நடக்க வேண்டுமென விரும்புகின்றனர். அவர்களுக்குத் தமிழ் மொழிச் சட்டத்தைப் பற்றிக் கவலையில்லை. தமிழ் மொழிச் சட்டத்தை அரசு நடக்கவைக்கு தமிழ் பேசும் ஊழியர்களே விழிப்புணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டியிருக்கின்றது. எனவேதான் இவர்களை வழி நடத்துவதற்கும், அவர்களது உரிமைகளைப் பேணுவதற்கும் மொழிவழித் தொழிற்சங்கங்கள் மிக, மிக அவசியம். 'மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஐக்கியப்பட்டு பணியாற்ற வேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது' இவ்வாறு அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கத் தலைவர் தி. வே. கனகரத்தினம் அவர்கள், சங்கத்தின் நான்காவது ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி ஆண்டுப் பொதுக் கூட்டம் கொட்டாஞ்சேனை வான்றுயின் வீதி 55 3/2ம் இலக்கத்தில் நடைபெற்றது.

தலைவர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மொழிவழித் தொழிற் சங்கங்கள் தோன்றியிராவிடில் இந்நாட்டில் தமிழ் பேசும் ஊழியர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும். அவர்கள் மற்றத் தொழிற் சங்கங்களின் அடிமைகளாக வாழவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கும் என்றார்.

துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபன தமிழ் ஊழியர்களின் சம்பளப் பட்டியல்களை தனிச் சிங்களத்தில் வழங்குவதை வன்மையாக கண்டித்து சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

# மலையகத் தமிழரை..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகளும் அதரித்தன இந்த உண்மையைத் தமிழ் மக்கள்—குறிப்பாக மலையகத்திலே இலங்கைப் பிரஜாவுரிமை பெற்று வாழக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் மறந்துவிடக் கூடாது.

## இரியகொல்லை வக்காலத்து

மலை நாட்டிலிருந்து தமிழினத்தை சிங்கள மயமாக்கி கபளீகரம் செய்யும் திட்டத்துக்கு ஆதாரமாக கடந்த வாரம் நாரம்பலையில் நடைபெற்ற கூட்டத்தாங்கொன்றில் உரையாற்றிய கல்வியமைச்சர் திரு. இரியகொல்லை கருத்து வெளியிட்டுள்ளார். 'மலையகத் தமிழர்கள் சிங்களவருடன் இணைந்து விடுவார்கள் என்று தாம் நம்புவதாக கல்வியமைச்சர் கூறியிருக்கிறார்.

இதன் அர்த்தம் என்ன? மலையகத் தமிழர்கள் விரைவில் சிங்களவர்களாக மாறி விடுவார்கள் என்பதே.

## பதில் என்ன?

இதற்கு மலையகத் தமிழர்கள் கூறப் போகும் பதில் என்ன? தாங்கள், பிறந்து வளர்ந்து, இரத்தத்தையும் வேர்வையையும் கொட்டி உருவாக்கிய மலைநாட்டுப் பூமியில் தங்கள் உயிரினைய தமிழ் மொழியைப் பேசி தமிழர்கள் என்ற தனித்தன்மையுடன் வாழப் போகிறார்களா அன்றி சிங்கள மொழியையும் பௌத்தத்தையும் தழுவி சிங்களவர்களாக மாறப்போகிறார்களா?

## துரோகத் தலைவர்கள்

மலையகத் தமிழர்களை சிங்கள மயமாக்கும் சூழ்ச்சித் திட்டத்தை இந் நாட்டுச் சிங்களத் தலைவர்கள் உருவாக்கி வருகையில் மலையக மக்களை வழி நடத்துவதாக கூறிக் கொள்ளும் சில துரோகத் தலைவர்களையிட்டும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். பொய்ப்பிரசாரத்தின் மூலம் மலைநாட்டுத் தமிழர்களை இந்தியாவுக்கு கப்பலேற்றி அனுப்ப ஒரு பக்கம் முயற்சிக்கும் இத்துரோகிகள், இலங்கைப் பிரஜாவுரிமை பெறக் கூடியவர்களை சிங்களவராக்கும் முயற்சிக்கும் துணை போகிறார்கள்.

அண்மையில் ஒருவர் தோட்டப் பாடசாலைகளில் சிங்களம் இரண்டாவது கட்டாய மொழியாகப் போதிக்கப்பட வேண்டும் என்று கூறிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சிங்களம் படிக்கலாமா?

மலையகத்தில் தமிழினத்தையே வேரறுக்க சிங்கள அரசியல் வாதிகள் சதித்திட்டங்கள் போடும் இக்காலகட்டத்தில் மலையகத் தமிழர்கள் சிங்களம் படிப்பது, யானை தன் தலையிலே மண்ணை வாரிக் கொட்டக் கூடிய செயலாகும்.

மலையகத்தில் தமிழினத்தின் தனித் தன்மையையும் உரிமையையும் சிங்கள அரசியல் வாதிகள் ஒப்புக்கொள்வதற்கு முன்பு சிங்களம் படிப்பதற்கு எந்த ஒரு மலை நாட்டுத் தமிழனும் முன்வரக் கூடாது.

## உரிமையுண்டு

இத் தொல்லைகளுக்கு பயந்து, இந்த நாட்டை விட்டு வெளியேறவும் எந்த ஒரு தோட்டத் தொழிலாளியும் முன்வரக் கூடாது. இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள், இந் நாட்டின் மண்ணுக்காக தம்மையே உரமாக்கியவர்கள், இந் நாட்டில் வாழுவதற்கு பூரண உரிமைபடைத்தவர்கள் மலையகத்திலே தமது தனித் தன்மையைப் பேணி தமிழ்மொழியைப் பேசி வாழுவதற்கு மலையகத் தமிழனுக்கு உரிமை இருக்கிறது.

## விழிப்புணர்ச்சி

மலையகத் தமிழர்கள் மொழிப்பற்றும் இனப்பற்றும் மிகுந்தவர்கள், சிங்களம் படித்து சிங்கள இனமாக மாறுவதற்கு ஒரு போதும் ஒருப்பட மாட்டார்கள். மலையகத் தமிழ் இளைஞர்களிடையே இன்று மொழியுணர்ச்சியும் இன உணர்ச்சியும் நிறைந்து காணப்படுகிறது. துரோகிகள் யார், இனத்தின் தொண்டர்கள் யார் என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்து விட்டது.

ஆகவே துரோகத் தலைவர்களின் சதிச் செயல்களையும் சிங்கள அரசியல் வாதிகளின் தீய எண்ணங்களையும் புரிந்து கொண்டு மலையகத்தில் தமிழையும், தமிழ் இனத்தையும் வாழவைப்பார்கள் நம் மலையகவாலிபர்கள் என்று நம்புவோம்.

# என்னைப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள போக்குவரத்து அதிர்ச்சி காரணமாக அலைகள் பாதிக்கப்பட்டு சரியான தகவல் கிடைக்காது போய் விடுகிறதாம். இந்த சோதனைகள் மூலம் எண்ணெயோ அல்லது இயற்கை வாயுவோ இருக்கும் என்பது தெரிந்தால்தான் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# தொலைபேசி கம்பி—புதிய கருவி

தொலைபேசிக் கம்பிகளை, பூமிக்கடியில் விரைவில் போடுவதற்கு வகை செய்கிறது புத்தம்புதிய ஒரு கருவி. அமெரிக்கா கண்டு பிடித்திருக்கும் இக் கருவி, தெருக்களிலும், நடைபாதைகளிலும், பிற தடங்கல்கள் இருக்குமிடங்களிலும் பூமிக்குள் வெகு விரைவில் துளை செய்துவிடுகிறது.

இக்கருவியின் பெயர் காம் பாக்டிங் ஆகர். பூமிக்கடியில் திருப்புளி போல் திருகித் திருகிச் செல்கிறது. மூன்று அங்குல விட்டம் உள்ள துளை இடுகிறது.

நியூ ஜெர்ஸி மாநிலத்தில் மர்ரே ஹில்லில் இருக்கும் தனது ஆராய்ச்சிக் கூடத்தில் இது தயாரிக்கப்பட்டதாக பெல் நிலையம் அறிவித்தது. புதிய குடியிருப்புப் பிரதேசங்களில் இருக்கும் தொலைபேசிக் கம்பிகள் அனைத்தையும் 1970-ம் ஆண்டு வாக்கில் பூமிக்கடியில் போட்டு விட வேண்டுமென்பதுதனது இலட்சியம் என்றும் இந்த இலட்சியம் கைகூடுவதற்கு இந்தக் கருவி—தமர் ஊசி உதவி செய்யும் என்றும் பெல் நிலையம் தெரிவித்தது.

## தேவை

சுதந்திரன் பத்திரிகை விற்பனை செய்வதற்கு பண்டத்தரிப்பு, திருக்கோயில், மாகோ, மாங்குளம், நெடுங்கேணி ஆகிய இடங்களுக்கு விற்பனையாளர்கள் தேவை

நிர்வாகி, சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு

## 'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

ஒரு வருடம் ரூபா 14-00

ஆறு மாதம் ரூபா 7-00

நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் சிறுகதை:

# திருந்திய உள்ளம்

'கிணிங்! கிணிங்!; கிணிங்.' ஆராதனை மணி கண, கணவென ஒலித்தது. மாணவர்கள் வரிசை வரிசையாகப் பிரார்த்தனை மண்டபத்தை அடைந்தனர்.

பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது 'தடால்' என்று ஒருஓசை எழுந்தது. மாணவர்கள் யாவரும் பிரார்த்தனையிலிருந்து விடுபட்டு சத்தம் வந்த திசையை நோக்கினர். அங்கே மணி என்ற சிறுவன் கண்களை மூடிய நிலையில் விழுந்துகிடந்தான். கந்தையா வாத்தியார் மாணவர்களை விலக்கிக் கொண்டு உள்ளே சென்று மணியை காற்றோட்டம் உள்ள இடத்திற்கு எடுத்துச் சென்றார்.

பிரார்த்தனை முடிந்தது. மாணவர்கள் வகுப்புக்களை நோக்கி நடந்தனர். மணிக்காக அங்குள்ள நெஞ்சங்கள் எல்லாம் பரிதாபப்பட்டன. சுரேஷைத் தவிர......

மணியும், சுரேஷும் ஒரே வகுப்பு மாணவர்கள். சுரேஷ் பணக்கார வீட்டுப் பிள்ளை. மணி ஏழைமகன். மணியின் நற்செயல்கள் யாவுமே சுரேஷுக்கு வெறுப்பை ஊட்டின. இதனுல் மணியின் மேல் சுரேஷுக்கு இனம் தெரியாத ஒரு ஆத்திரம் இருந்து வந்தது.

கந்தையா வாத்தியார் சுரேஷைக் கூப்பிட்டு தேனீர் வாங்கி வரும்படி காசைக் கொடுத்தனுப்பினர். சுரேஷ் தனது ஆத்திரத்தைத் தீர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான். தேனீரில் ஒரு பிடி மண்ணை அள்ளிக்கலந்தான். ஒன்று மறியாத மணி மடக், மடக்கென்று குடித்தான். மண் அடியில் தங்கிக் கொண்டது. இப்பொழுது மணிக்கு ஓரளவு தெம்பு பிறந்தது. தேனீர் வாங்கி வந்த சுரேஷை நன்றியுடன் பார்த்தான் மணி. ஆனால் சுரேஷ் அவனை விழுங்கி விடுவது போலப் பார்த்தான்.

'காலையில் என்னடா சாப்பிட்டாய்'? எனக் கந்தையா வாத்தியார் கேட்டார்.

'பழஞ்சோறு' என்று மணியின் உதடுகள் முணுமுணுத்தன. அன்றைய பாடங்கள் எதுவுமே மணியின் மூளையில் ஏறவில்லை. அவனுக்கு அளவு கடந்த பசி.

மறு நாள்! வாசிப்புப் பாட மணியடித்தது. கந்தையா வாத்தியார் பிரம்புடன் உள்ளே வந்தார்.

'எல்லோரும் ஆபிரகாம்லிங்கனின் பாடத்தை எடுங்கள்' என்று ஆசிரியர் கூறியதும் மாணவர்கள் 'ஆபிரகாம லிங்கன்' என்ற பாடத்தை புரட்டினர்.

'அந்தப் பாடத்தில் இரண்டாவது பந்தியை வாசி மணி'

'அன்று மாலை ஆபிரகாம் லிங்கனிடம் ஒரு சிறுவன் வந்து 'உங்களுக்குப் பின் நான் ஜனதிபதியாக வரலாமா' என்று வினவினுன். அதற்கு அவர் 'நீ எவ்வளவோ ஜனதிபதியாக வந்தால் என்ன வராவிட்டால் என்ன, நன்றாக கழுதை போல துன்பங்களைச் சுமக்கக் கற்றுக்கொள். வரிக்குதிரை போல அழகை விரும்பாதே. பன்றி போல உணவைத் தேடு. நாயைப் போல நன்றியுள்ளவனுயிரு. என்று கூறினர்' இந்தப் பந்தியை மணி வாசித்து முடிணியும், கண கணவென மணி ஒலி கேட்கவும் சரியாக இருந்தது.

மணிக்கு அந்தப் பந்தியில் ஆபிரகாம்லிங்கன கூறியவைகளையும் தனது வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான.

'கழுதை போலத் துன்பங்களைச் சுமக்கச் சொன்னுரே! நானும் எவ்வளவு துன்பங்களைச் சுமக்கின்றேன். வரிக்குதிரைபோல அழகை விரும்புகின்றேனு? இல்லையே? ஆனல் பன்றி போல உணவைத்தேடு என்ருரே? அதுதான் என்னல் முடியவில்லையே? ஆமாம்! நான் தான் ஏழை வீட்டுப் பிள்ளையாச்சே? எப்படி அதிகம் சாப்பிட முடியும்? பூமியைப்போலப் பொறுமையாகவே தான் நான் வகுப்பில் இருப்பேன்' மணியின் உள்ளத்தில் அந்த மணிவாக்குகள் பசுமரத்தாணி போலப் பதிந்து விட்டது. ஆனல் மற்றைய மாணவர்களுக்கு அதைப்பற்றிய சிந்தனையே இல்லை. ஆமாம்! அதுதான் மணிக்கும் மற்றய மாணவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

**ஆ. ப. சந்திரநாதன்**

அடுத்தடுத்து வகுப்பில் நடந்த பல சம்பவங்கள் சுரேஷ், மணி ஆகியோரது பகைக்கு நெய்யூற்றி வளர்த்தன.

அன்றொருநாள் ... சரித்திரப்பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்தது ஆசிரியர மாணவர்களிடம் கேள்விகேட்டுக் கொண்டிருந்தார்.

'இரு அறிஞர்கள் எழுதிய நூல்கள் பிரான்ஸ் யுத்தத்திற்கு ஊக்கம் அளிப்பனவாக இருந்தனவாம். யார் அந்த அறிஞர்கள்? சுரேஷ் சொல்லு பார்டபோம்?'

சுரேஷ் எழுந்து நின்று விடை தெரியாமல் முழித்தான். மெதுவாக அருகே இருந்த மணியைச் சுரண்டி விடை கேட்க எண்ணினுன். 'சீ! உன் எதிரியிடமா விடை கேட்கப் போகிருய்?' என்று அவனது ஆணவம் கூறிற்று' இருந்தும் அடிக்குப் பயந்து சுரண்டினுன். ஆனல் மணிக்கும் விடை தெரியாது. சுரேஷ் முழிப்பதைக் கண்ட குறும்புக்கார இராமு 'பாரதியும், கம்பருமடா' என்று கூறினுன்.

உடனே சுரேஷ் 'பாரதியாரும், கம்பரும் சார்!' என்று கூறவே வகுப்பில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

சுரேஷின் முகம் அவமானத்தால் சுருங்கியது. பேசாமல் அடியையும் வாங்கிக்கொண்டு இருந்து விட்டான்.

'நான சுரண்டிக் கேட்டும் மணி விடை சொல்லித் தரவில்லையே?' என்று எண்ண எண்ண அவனுக்கு ஆத்திரம் வந்தது

அன்று இடைவேளையின் போது மணியின் வாசிப்பு புத்தகத்தை சுரேஷ் திருடி விட்டான். அன்றைய தினம் வாசிப்புப் புத்தகம் இல்லாததால் மணிக்குக் கந்தையா வாத்தியார் நன்ருகவெளுத்து வாங்கி விட்டார். சுரேஷிற்கு அப்பொழுது தான் நிம்மதியாக இருந்தது. அத்தனை மாணவர்களிலும் சுரேஷுக்கு மட்டும் மகிழ்ச்சியான சம்பவம் அது.

(அடுத்தஇதழில் முடியும்)

# தேன் துளிகள்

கற்களால் கட்டப்படும் கோயில்களைவிட நரம்பாலும் தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையான கோயில்கள்.

—அண்ணல்காந்தி.

தூய உள்ளமே கோயில்! நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்! மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை! ஏழைகள் இதயத்தில் களிப்பூட்டும் பணிபுரிதலே பகவானுக்கு தோத் திருவிழா யாவும்!

—அறிஞர் அண்ணு.

நான் எதிர்க்கிறேன்—ஏனெனில் செங்கோல் சிலுவை இரண்டையும்விட பலமான பேனு இதோ என் கையில் இருக்கிறது.

—வால்டேர்.

கடவுள் இருக்கின்ருரா— அது யாருக்கும் தெரியாது. கடவுள் இல்லையா—அதுவும் யாருக்கும் தெரியாது.

—இங்கர்சால்.

அனுப்பியவர்: செல்வன். ஞா. பழனித்தம்பி, கணுதாவளை.

# வள்ளுவன் புகழ் பாடு!

—'யோகன்'—

வாழுங் கருத்தினை வடிவுட ளுக்கிய
வள்ளுவன் புகழ்பாடு!
தாழும் நிலையினைத் தரணியில் மாற்றிட
தங்கக் குறள்நாடு!

அறிவுக் கடலினில் அகழ்ந்து குளித்த
அழகிய முத்தேடு!
அரிய கருத்தினை அழகுறப் பாடிய
அருமைக் கருத்தேடு!

சாதி யொன்றெனச் சாற்றிய குறளின்
சாகா நெறிபாடு!
நீதி யொன்றென ஆதியிற் கூறிய
நிமலன் புகழ்பாடு!

நன்மை தின்மையை நயந்து புனைந்திட்ட
நன்னெறிக் குறளோடு!
பன்மை மக்களும் பாடிக் களித்திடும்
பழந்தமிழ்க் கருத்தேடு!

ஈரடிக் குறளில் இவ்வுல கடக்கிய
இறையவன் என்றுடு!
சீரடி கண்டு சிறப்புடன் வாழும்
செம்மை நினைந்தாடு!

முப்பாற் கடலில் முத்துக்க ளளித்திட்ட
முனிவன் புகழ்பாடு!
எப் பாலவர்க்கும் ஏற்குங் கருத்தினை
ஈந்தவன் புகழ்பாடு!

நாளை வாழ்ந்திட நன்னெறி காட்டிய
நாவலன் புகழ்பாடு!
வாழுங் கருத்தினை வழங்கிய வள்ளுவன்
வாழ்ந்திட வழிதேடு!




# மாணவனின்சட்டைப்பைக்குள் இருந்த பொருட்கள் இவை

சிறு பிள்ளைகளின் சட்டைப் பைகளைச் சோதித்துப் பார்த்தால் விசித்திரமான சேமிப்புப் பொருள் எல்லாம் கிடைக்கும். அவற்றைத் துவைப்பதற்கு முன் போ,சலவைக்குபோடுவதற்கு முன்போபாக்கெட்டுகளைச் சோதித்து அவற்றிலிருந்து எடுக்கும் பொருள்களைக் கண்டு சிலையாக நின்றுவிடுவர், அன்னையர் பலர்.

டண்டீ நகரத்துப் பள்ளிக்கூட வாத்தியார் ஒரு மாணவனின் சட்டைப் பையைப் பரிசோதனை செய்ததில் கீழ்க்கண்ட பொருள்கள் இருந்தனவாம்:

சிறிய கண்ணுடிப் புட்டி ஒன்று. அதனுள்ளே இரண்டு குளவிகள் இருந்தன. இரும்புக் குழாய்துண்டு. அரை நீளமாம் அது; நான்கு மின் விளக்கைப் பொருத்தும் பிளக்குகள்; ஒரு பினேட்; இரண்டு அவுன்ஸ் பீரங்கி வெடி மருந்து பவுடர்; மூன்று போல்ட் ஆணிகள்; மூன்று 'பேண்டேஜ்' களாம்.

மடேய்ரா நகரத்துப் போலீஸ்காரர் ஒருவர் ஏழு வயதுச் சிறுவனின் சட்டைப் பையை பரிசோதனை செய்ததில், ஆறுபச்சைப் புழுக்கள் உயிருடன். ஏழு துண்டு சிகரெட்டுகள்; தையல்காரர் அளவெடுக்கும் 'இன்ச்டேப்' இரண்டாவது உலக மா யுத்த போட்டோக்கள் இரண்டு; ஒரு டஜன் 'ஜிப்' துண்டுகள் ஒரு சட்டி; பிரார்த்தனை புத்தகம் ஒன்று; இவை கிடைத்தனவாம்.

# கிறிஸ்து நாதர் எப்போது பிறந்தார்?

இயேசு கிறிஸ்து பிறந்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்று கேட்டால் 1967 ஆண்டுகள் ஆகின்றன என்று எல்லோரும் சுலபமாக கூறிவிடுவோம்.

ஆனல் உண்மையிலேயே கிறிஸ்து பிறந்தது கி. மு. 6-ல் தான். அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன் என்று கணக்கிடப்படும் 5வது நூற்றுண்டில்.

இதென்ன புதுக் குழப்பம் என்கிறீர்களா? குழப்பம் இல்லை. சரித்திர ஆராய்ச்சி அப்படித்தான் கூறுகிறது.

கிறிஸ்து பிறந்தபோது மிகப் பெரிய நட்சத்திரம் தெரிந்ததாகவும், ஆடுமேய்க்கும் இடையர்கள் அதைக் கண்டதாகவும் கூறப்படுகிறது. அதே சமயம் அன்று டிசம்பர் மாதம் 25ம் திகதி யென்றும் கூறப்படுகிறது.

டிசம்பர் மிகவும் குளிர் நிறைந்த மாதமாகும். அப்போது ஆட்டிடையர்கள் வெளியில் தங்கவே முடியாது. எனவே இயேசுகிறிஸ்து பிறந்தது வசந்த காலமாகவோ அல்லது கோடைகாலமாகவோ தான் இருக்கவேண்டும்.

கிறிஸ்து பிறந்ததாகக் கணக்கிடப்பட்டகாலம் ரோம் நகர் ஆண்டுக் கணக்கில் 754க்கு சமமாகும். ரோம் நகரின் மாமன்னன் ஹெராடு 750ல் (அதாவது கி. மு. 6 அல்லது கி. மு. 7 க்கிடையில்) இறந்தான்.

ஆனல் வரலாற்றுப்படி ஹெராடு உயிரோடு இருக்கும் போது கிறிஸ்துநாதர் பிறந்தார் என்பது தெரிகிறது.

இதனுல்தான இயேசுநாதர் பிறந்தகாலம் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை என்பது பிந்திய ஆராய்ச்சிகளில் தெரிய வந்தது. ஆனல் அந்த ஆராய்ச்சி வெளியாகும்போது கலண்டரை மாற்றக்கூடிய சூழ்நிலை இல்லாமற் போய்விட்டது.

இயேசு பிறந்த காலம், ஆண்டு ஆகியவற்றை நிர்ணயித்தவர் அபட்டியோ...

# இது புரியுமா?

நம்மில் அநேகர் வினடியும் நொடியும் ஒன்று என்றே நினைக்கின்றனர். ஆனல் நொடி வேறு, வினடி வேறு. வானெலி நிலையத்தாரும். 'அடுத்த நிகழ்ச்சி சில வினடிகளில் தொடங்கும்' என்று கூறி முடித்து சில நொடிகளில் நிகழ்ச்சியைத் தொடங்குகின்றனர். வினடி ஆங்கிலேயர் வருவதறகு முன்பே பழக்கத்தில் இருந்தது. அது ஒரு நாழிகையில் 60...இல் ஒருபாகம், ஒரு நாளிகை என்பது ஆங்கில கால அளவுப்படி 24 நிமிடங்கள் ஆகும். எனவே வினடி என்பது 24 நிமிடத்தில் 60ல்-1-பாகம். அதாவது 24 நொடிகள் ஆகும். நொடி என்பது ஒரு நிமிடத்தில் 60-இல் 1-பாகம். ஆகவே வினடி வேறு நொடி வேறு. 1 நொடி என்பதைத்தான் 1-செக்கன் என்கிறேம்.

60 வினடிகள்— 1 நாழிகை
60 நாழிகை— 1 நாள்
60 நொடிகள்— 1 நிமிடம்
60 நிமிடம்— 1 மணி

உதவியவர்:

பொ. கணேசன்.
கல்முனை-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகொட்டும்3வதுவாரம்



இங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு (தருமலை) | விஜிதா (ஹட்டன்) | மொடேர்ன் (பண்டாரவலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | ராஜ் (நீர்கொழும்பு) | கல்யாணி (நாவலப்பிட்டி)

ஜெய்சங்கர், ஐ ரு, நாகேஷ்
பேபி பத்மினி (இரு வேடங்கள்) ஜி. வரலட்சுமி நடித்த
ஏ. வி. எம்.

# குழந்தையும் தெய்வமும்

# 6-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) | லட்சுமி (கரவெட்டி) | சரசாவி (அக்கரபத்தனை) | ஜோதி (கல்கா)
வெம்பிளி (கண்டி) | ஈஸ்வரி (இறக்குவானை) | வசந்தா (புசல்லாவ)



★ ஜெய்சங்கர்,
★ விஜயலட்சுமி,
ரவிச்சந்திரன்
நாகேஷ்
நடிக்கும்

# நாம் மூவர்

---



# இரண்டாவது வெற்றி வாரம்!

மிருகங்கள் மனதை உருக்கும் வகையில் நடித்த பல சம்பவங்கள் நிறைந்த புதுமையான சித்திரம்

செண்ட்ரல் (மருதானை) | ராணி (யாழ்ப்பாணம்)
ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] | கிரி [பண்டாரவலை] | ஆனந்தா [கம்பளை]

★ சுந்தரராஜன் ★ முத்துராமன் ★ பாரதி ★ ஆதித்தன்
★ எஸ். வி. ராமதாஸ் ★ சுந்தரிபாய் நடித்த

தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும் தேவரின்

# தெய்வச்செயல்

கதை தயாரிப்பு டைரக்ஷன் மேற்பார்வை: எம். ஏம். ஏ: சின்னப்பாதேவர்

**விரைவில்** கல்யாண குமார், தேவிகா நடிக்கும்

# சீமான் பெற்ற செல்வங்கள்

---



# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சல்லமஹால் (கொழும்பு) | ஈரோஸ் (ராமன்கடை) | இம்பீரியல் (மட்டுநகர்) | நெல்சன் (திருமலை)
றீகல் (கண்டி) | கிங்ஸ் (பதுளை) | றீகல் (நீர் கொழும்பு) | றீகல் (கம்பளை)

இப்பொழுது காட்சியளிக்கிறது வின்சர் (யாழ்நகர்)

★ ஜெமினி கணேசன் ✦ கே. ஆர். விஜயா நாகேஷ்
வி. கே. ராமசாமி ராதிகா நடிக்கும்

# சின்னஞ் சிறு உலகம்

கதை—வசனம்—டைரக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்



**விரைவில்!** கெயிட்டி திரையில்!

ஆனந்தன், கே. ஆர். விஜயா, ரவிச்சந்திரன் நடிக்கும்

# கல்யாண மண்டபம்

இப்பத்திரிகை கிரௌன் நியூஸ்பேப்பர் லிமிட்டட்டினரால் கொழும்பு ... நாயக்கர் வீதி, 194, ஆ இலக்கத்தில் 1967-ம் வருடம் ஒக்டோபர் ... அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org